# ஸ்ரீ சத்ய சாயி சேவா தள கையேடும் செயல்பாட்டு வழிநெறிகளும்

ஓம் சாய்ராம்

# ஸ்ரீ சத்ய சாயி சேவா தள கையேடும் செயல்பாட்டு வழிநெறிகளும்

★

மே 1979 அன்று பெங்களூர் வைற்பீல்டில் நடந்த
மத்திய பயிற்சி முகாமில் எடுக்கப்பட்ட முடிவுகளுக்கமைய உள்ளது.

1 9 8 4

# உள்ளடக்கம்

1. அறிமுக உரை (ஆங்கிலம்)
2. அறிமுக உரை (தமிழாக்கம்)
3. அணிந்துரை
4. ஆசியுரை
5. வாழ்த்துரை
6. முன்னுரை
7. முகவுரை
8. திவ்விய உபதேசம்
9. அமைப்பு
10. நிர்வாகம்
11. தராதரம்
12. திட்டமிடலும் பயிற்சியும்
13. வழிநெறிகளும் – சேவை நடபடிக்கைகளும்
14. கிராமப்புற சேவை நடபடிக்கைகள்
15. அநுபந்தம்
    1. அங்கத்துவ மனு பத்திரங்கள்
    2. தனிப்பட்ட - குடும்ப - சமூக ரீதியான சாதனைகள்
    3. சேவைத் திட்டங்களுக்கான வழிநெறிகள்
        1. உடல்நலமும் – சுகாதாரமும்
        2. இரத்த தானம்
        3. நாராயண சேவை
        4. சூழலை சுத்தமாக வைத்திருத்தல்
        5. புத்தக வங்கி
        6. தொழில் முறைப் பயிற்சி பணியகம்
        7. நிவாரண வேலைகள்
        8. சாயி இலக்கியங்கள் விற்பனை
        9. கட்டுரைப் போட்டி
        10. மருத்துவ மனை விஜயம்
        11. தகவல் பணியகத் திட்டம்
        12. வலது குறைந்தோர்க்குரிய பணி
        13. பன்முக தேவைக்குரிய மோட்டார் வண்டிச் சேவை
        14. படச்சுருள்களும் படவழுக்கிகளும் (சிலைட்)
        15. இலவச நூல் நிலையம்
        16. கண் காட்சி

# INTRODUCTION

*from the Editor,* **"Sanathana Sarathi"**

Love of God! But, where can we find God? God is in every living being, more so in the heart of man. How can we love the God in man? By serving him, with all the skill, all the strength, all the joy, all the faith we have. "Heal the sick, strengthen the weak, wipe the tears, clothe the naked, feed the hungry, open the eyes of those who cannot see" — this is the worship of the God living in our fellow-men. This is the purpose of the Seva Dal, established by Bhagavan Sri Sathya Sai Baba and blessed by Him. He watches every thought, word and deed of the Seva Dal. He wants every member of the Seva Dal to purify his mind through japa and dhyana. He asks them to cultivate sympathy and understanding, to serve those who have no one to serve them, to be steady and straight forward, to avoid pride and publicity. This book will help those who have heard the call of the Avatar to share their love with those who need them most.

Prasanthi Nilayam,
22-8-83

**Professor N. Kasturi**

தமிழாக்கம்:

# அறிமுக உரை

இறைவன் பால் அன்பா? ஆனால் அந்த அன்புக்குரியவனை எங்கே கண்டறிவது? ஒவ்வொரு ஜீவனிடத்தும் அவன் உள்ளுறைகிறான். அதிலும் மனிதனின் இதயத்திலே மேலும் விளக்கமாகிறான். உள்ளத்திலே குடிகொண்டவனை நேசிப்பது எவ்வாறு? சேவையே நேசமாகின்றது. எங்களிடம் உள்ள முழு நம்பிக்கையையும், முழு மகிழ்ச்சியையும், முழு ஆற்றலையும், முழுத் திறமையையும் திரட்டி மனிதனுக்குத் தொண்டு புரிவதன் மூலம் அவனுள் உறையும் தெய்வத்தை நேசிக்க முடியும். "நோயுற்றவனைக் குணப்படுத்துங்கள்; நலிந்தவனுக்கு தெம்பு ஊட்டுங்கள்; கண்ணீரைக் கண்டவிடத்துத் துடைத்துவிடுங்கள்; உடுதுணியற்றவனின் மானத்தைக் காப்பாற்றுங்கள்; ஊணின்றி வாடுபவனின் பசியை ஆற்றுங்கள்; பார்வையற்றவனின் கண்ணைத் திறந்துவிடுங்கள்" - இதுவே தெய்வத்தைச் சக மனிதர்களிடம் கண்டு ஆராதிக்கும் முறையாகும். பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபாவினால் நிறுவி, ஆசீர்வதிக்கப்பட்ட சேவா தள அமைப்பின் நோக்கும் இஃதே.

சேவா தளத்தினரிடையே பிறக்கும் ஒவ்வொரு கருத்தையும், பேச்சையும், செயலையும் பகவான் உன்னிப்பாகக் கவனிக்கின்றார். சேவா தளத்திலுள்ள ஒவ்வொரு உறுப்பினரும் ஜபம், தியானம் வாயிலாகத் தத்தம் மனத்தின் களங்கம் நீக்க வேண்டும் என்று விதிக்கின்றார். இரக்கம், புரிந்துணர்வு ஆகிய பண்புகளைப் பக்குவப்படுத்தி ஆதரவற்ற மக்களுக்குச் சேவை புரியும்படியும், உறுதிப்பாட்டையும் நெறியையும் கடைப்பிடித்து, தற்பெருமையையும், விளம்பரத்தையும் தவிர்க்கும்படியும் கோருகிறார். அன்பு பாராட்ட யாருமற்றவர்களோடு உங்கள் அன்பைப் பகிர்ந்துகொள்ளுங்கள் என்ற சாயி அவதாரத்தின் அழைப்பைச் செவிமடுத்தவர்களுக்கு இந்நூல் பயனுடையதாகும்.

பிரசாந்தி நிலையம்.
22-8-1983.

**பேராசிரியர் என். கஸ்தூரி**

ஓம் சாய்ராம்

# அணிந்துரை

ஒன்ருகக் காண்பதுவே காட்சி. அங்கிங்கெனுதபடி எங்கும் பிரகாசமாய் ஒளிரும் பரசிவப் பொருளை எல்லா மனிதரிலும் எல்லா உயிர்களிடமும் கண்டு அவர்களுக்குச் சேவை செய்வதே மனிதப் பிறப்பின் பயன்.

படமாடக் கோயில் பகவற்கொன்றீயில்
நடமாடக் கோயில் நம்பர்க்கிங் காகா
நடமாடக் கோயில் நம்பர்க்கு ஒன்றீயில்
படமாடக் கோயில் பகவர்க்கு அதுஆமே.

எனும் திருமந்திரத்தையே பகவான் பாபா மானவ சேவை மாதவ சேவை என வற்புறுத்துகிருர். செய்வன திருந்தச் செய் என்னும் மூதாட்டியின் மொழியின்படி நம் சேவையும் குறைவற்றதாகவும் சிறந்ததாகவும் இருக்க வேண்டும். இதையே கிருஷ்ண பகவான் தமது கீதையில் கர்மாசு கௌசலம் என்று விதந்து உரைக்கின்ருர். இம் முறையில் சேவா தள ஊழியர்கள் இயங்க வேண்டும் என பகவான் விடுத்த ஆசி மொழிகளை நண்பர் சி. முத்துலிங்கம் தமிழில் மொழி பெயர்த்து வழங்கியுள்ளார். இவர் சேவா தள ஊழியர்களுக்கு நடத்தும் பயிற்சி முகாங்களில் சேவையின் நுட்பதிட்பங்களை எடுத்து விளக்கும் அனுபவம் உடையவராகையால் இம் மொழி பெயர்த்தலுக்குப் பாத்திரமாவார். பகவான் பொன்மொழிகளை ஒருமுறை அல்ல பலமுறையும் துருவித் துருவி ஆய்ந்து நம் சேவை பகவான் கட்டளைகளுக்கு தரமா எனத் தற்சோதனை செய்யும் சேவா ஊழியர்களுக்கு இக்கைநூல் இன்றியமையாதது. சாய் பக்தர்கள் யாவரும் இதை அன்புடனும் ஆவலுடனும் ஏற்க என வாழ்த்தி இச் சுருங்கிய அணிந்துரையை முடிக்கின்றேன்.

ஓம் சாய்ராம்

கு. பாலசிங்கம்

ஓம் சாயிராம்

# ஆசியுரை

''கடமையே கடவுள்! உழைப்பே உன்னத வழிபாடு! மானிட சேவையே மாதவ சேவை!'' என்பது பகவான் பாபாவின் அருள் வாக்குகளாகும். இவ்வாக்கினை தாரக மந்திரமாகக் கொண்டு, அதன்படி நிற்றலே ''சாயி பக்தர்'' என்ற சொல்லிற்குப் பொருளாகும்.

இப் பொருளிற்கேற்ப எல்லோரும் இன்புற்றிருக்கவே, அகிலம் எங்கும் ஸ்தாபனங்களை உருவாக்கி வழிநடத்திச் செல்லுகிறார் எம் கலியுக தெய்வம். இத் தெய்வத்தின் திருவாக்கினைச் சிரமேற் கொண்டு, திரிகரண சுத்தியோடு, திருத் தொண்டாற்றி சிவானுபவம் பெற்றுய்பவர் ஒரு சிலரே.

''பெரிது பெரிது தொண்டர் தம் பணி பெரிது! எம் கடன் பணி செய்து கிடப்பதே!'' என்ற ஆன்றோரின் அமுத மொழிக்கேற்ப ஈழமணித் திருநாட்டிலும் சாயி ஸ்தாபனங்கள் உருவாக்கப்பட்டு தெய்வத் திருப்பணியாற்றி வருகின்றன.

இந்த ஸ்தாபனங்களுள் பலராலும் அறிமுகப்பட்ட அணுக்கத் தொண்டரே சகோதரர் சி. முத்துலிங்கம் அவர்கள். சில ஆண்டுகளுக்கு முன் சாதாரண சாயி பக்தராகத் தன்னை வெளிப்படுத்திக்கொண்ட முத்துலிங்கம் அவர்கள், ஈழத்து சமித்தி ஒன்றின் முன்னைய தலைவராகவும் – இன்று பாலவிகாஷ் குருவாகவும் – அகில இலங்கை இணைப்புக் குழுவின் அங்கத்தவராகவும் பகவானால் அருள்பாலிக்கப் பட்டு ஆட்கொள்ளப்பட்டுள்ளார்.

முன்னாளில் பல்வகையில் என்னுடன் இணைந்து ஈழத்தில் சாயி நாமம் பல்கிப் பெருக அயராது உழைத்தவர் என்பதை என்னால் மறக்கமுடியாது. அன்னாரது ஆழ்ந்த விடாமுயற்சியும், பிரசாந்தி நிலையத்தில் நடைபெறும் பல மகாநாடுகளில் பங்குபற்றிய ஆற்றலும் இங்கு ஒன்றுதிரண்டு இப்புத்தகத்தைத் தாய் மொழியில் மொழிபெயர்க்க வழிகோலியுள்ளது.

அன்பர் முத்துலிங்கத்தின் அரும்பெருந் தொண்டு பல்கிப் பெருகவும் - அவரது சாயி சேவா மென்மேலும் வளரவும், எமது சற்குரு சாயியை, சிவசக்தி ரூபனை, நடமாடும் தெய்வத்தை வேண்டிக் கொண்டு, எனது அன்பையும் ஆசியையும் கூறிக் கொள்ளுகிறேன்!

ஜெய் சாயிராம்!

டாக்டர் அ. கணேசாள்
(முன்னாள் அகில இலங்கை தேசிய மகிலவிபாக் தலைவி)
உதவி வைத்திய அதிகாரி
சத்தியசாயி வைத்தியசாலை

வெண் வயல்,
பெங்களூர். 560066
22-8-1983.

ஓம் சாயி ராம்

# வாழ்த்துரை

ஸ்ரீ சத்திய சாயி சேவா தள தொண்டர்கள் பயன்படுத்துவதற்காக ஓர் ஆங்கிலக் கைநூல் பிரசாந்தி நிலையத்தினால் சில வருஷங்களுக்கு முன்பு வெளியிடப்பட்டது. இலங்கையில் தமிழ் பகுதிகளில் சத்திய சாயி சேவா சமித்திகள் பெருகிக்கொண்டு வருகின்றன. இச்சமித்திகளின் அமைப்பாளர்களுக்கும் சேவா தள தொண்டர்களுக்கும் பயன்படக்கூடிய ஓர் கைநூல் தமிழில் இல்லாதது ஓர் குறையாக இருந்து வந்தது. இந்தக் குறையை பகவானின் ஆசீர்வாதத்தோடு ஸ்ரீ எஸ். முத்துலிங்கம் இந்நூலைத் தமிழில் மொழிபெயர்த்து வெளியிடுவதன்மூலம் நிவர்த்தி செய்கிறார். பெரியார் கஸ்தூரி அவர்கள் இந்நூலை தன் சொந்தப் பாணியிலே அறிமுகம் செய்து வைக்கிறார்.

ஸ்ரீ முத்துலிங்கம் அவர்களின் பெரு முயற்சிக்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்களையும், பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்ஙனம்
சாயி சேவையில்
**செ. சிவஞானம்**
(அகில இலங்கை சத்திய சாயி சேவா நிறுவனங்களின் இணைப்புக் குழுத் தலைவர்)

14, வைமன் வீதி,
யாழ்ப்பாணம்.

ஓம் சாயிராம்

# முன்னுரை

ஸ்ரீ சத்திய சாயி சேவா ஸ்தாபனங்களிலுள்ள சேவா தளத் தொண்டர்களுக்காக ஆங்கில மொழியில் ஒரு கையேடு, 1979ம் ஆண்டு ஜூலை மாதம் 9ம் திகதி குரு பூர்ணிமைத் தினத்தன்று ஸ்ரீ சத்திய சாயி சேவா ஸ்தாபனங்களின் உலகக் கவுன்சிலினால் பகவான் திரு முன்னிலையில் வெளியீடு செய்யப்பட்டது.

சேவை நடவடிக்கைகளுக்கு வழிகாட்டும் மேற்படி நூலைத் தமிழில் படித்துப் பயன்பெறக்கூடிய பக்தர்களுக்காக ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கு மொழிபெயர்க்க ஆவலுற்றேன். அந்த ஆவல் நிறைவேறும்படியாக, வவுனியா ஸ்ரீ சத்திய சாயி சேவா சமித்தியின் கல்வி வட்ட நிர்வாகி ஸ்ரீ வே. க. சபாரத்தினம் அவர்கள் மொழி பெயர்த்து உதவ, யாழ்ப்பாணச் சமித்தியின் பாலவிகாஸ் குரு ஸ்ரீ செ. ஞான சேகரம் அவர்கள் பிரதியைச் சரிபார்த்துத் தந்தார்கள். 1983ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் பிரசாந்தி நிலையத்தில் நடைபெற்ற குரு பயிற்சி முகாமின்போது பகவானின் ஆசியும் இதற்குக் கிடைத்தது: ஆகஸ்டு 22ம் நாள், காலை, பகவானின் சந்நிதானத்தில் மொழிபெயர்ப்புப் பிரதியைச் சமர்ப்பித்தபோது, ஐயன் பிரதியின் மேல் திருக்கரத்தை வைத்து, அழுத்தி ஆசீர்வதித்து அருளினார். அன்று மாலை பேராசிரியர் கஸ்தூரி அவர்கள் சிறப்புரை எழுதி வழங்கினார்கள்.

அகில இலங்கை தேசிய மகிலவிபாக் முன்னாள் தலைவி, டாக்டர். செல்வி. அ. கணேசாள் அவர்களின் ஆசியுரையும், உலகக் கவுன்சிலின் அங்கத்தவரும், அதன் இலங்கைப் பிரதிநிதியுமான ஸ்ரீ கு. பாலசிங்கம் அவர்களின் அணிந்துரையும், அகில இலங்கை இணைப்புக் குழுத் தலைவர் ஸ்ரீ S. சிவஞானம் அவர்களின் வாழ்த்துரையும் இம் மொழிபெயர்ப்பு நூலுக்குக் கிடைத்துள்ளன.

உலகில் தொண்டு சிறக்க வேண்டும் என்ற கருணையினால் பகவான் சேவை யாண்டாகப் பிரகடனம் செய்துள்ள இந்த வருடத்தில் பெரியோர் நல்லாசியுடன் வெளிவரும் இம் மொழிபெயர்ப்பு நூல் எம்பெருமானாகிய சத்திய சாயியின் திருவடிக் கமலங்களுக்கே காணிக்கையாகின்றது.

சாயி சேவையிலுள்ள,
சி. முத்துலிங்கம்
(அகில இலங்கை இணைப்புக்குழு அங்கத்தவர்)

வவுனியா
28-10-1984.

# முகவுரை

பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபாவின் சந்நிதானத்தில் நடைபெற்ற அனைத்து இந்திய மாவட்ட சேவா தள நிர் வாகிகளின் மத்திய பயிற்சி முகாமின் பெறுபேருக இந்த கையேடு வெளிவருகின்றது.

பகவான் பாபா பயிலுனர்களுக்கு அளித்த திவ்விய செய்தியின் மூலம் சேவைக்குரிய திட்டங்கள் தீட்டுதலையும், செயற்படுத்துதலையும் உள்ளடக்கிய இக் கைநூலில் முக் கியத்துவம் புரிந்துகொள்ளக்கூடியதாகும். பகவானின் அருளுரையிலிருந்து மேற்கோள் ஒன்று கீழே எடுத்துத் தரு கிறேன்.

"நாங்கள் இதுவரை நடத்தியுள்ள அனேக மகாநாடு களிலும், இந்தச் சேவா தள அமைப்பாளர்களின் மகாநாடு மிகுந்த புனிதமும் மிக்க உட்பொருளும் உடையது. இங்கு முடிவெடுத்த ஒவ்வொரு தீர்மானத்தையும் கட்டுதிட்ட மாகவும், உள்ளப் பற்றோடும் செய்கை முறையில் அமுலாக்கி அதன் விளைவாக இந்த நிறுவனத்தை மனுக்குலம் முழுமைக் கும் பயனுக்கும்படி உங்களைப் பணிக்கிறேன்."

இப்பணியில் ஈடுபடும் அனைவரையும் பகவான் ஆசீர் வதிப்பாராக என்று பிரார்த்திக்கிறேன்.

நிர்வாகி,
ஸ்ரீ சத்திய சாயி சேவா நிறுவனங்களின்
உலக அமைப்பு

குரு பூர்ணிமா,
9, ஜூலை 1979

### அனைத்து இந்திய மாநிலங்களின்
### மாவட்ட சேவா தள அமைப்பாளர்களுக்கு
## பகவான் ஸ்ரீ சத்திய சாயிபாபா அருளிய
# திவ்விய உபதேசம்

சேவை ஆத்மிக சாதனைகளில் அதி உயர்ந்தது. வாழ்வின் லட்சியத்தை விரைவிலோ காலா காலத்திலோ எய்துவதற்கு சேவை உதவுவதுபோல, ஜெபதியானமோ, சாஸ்திரங்களில் தேர்ச்சியோ அல்லது வேத நூல்களில் புலமையோ உதவுவதில்லை. உங்களையே நீங்கள் அர்ப்பணித்துச் செய்யும் இந்தச்சேவாசாதனையை எப்படிச் சிறப்புற நடத்துவது என்பது பற்றிச் சென்ற ஐந்து நாட்களாகக்கருத்துப் பரிமாறி வந்திருக்கிறோம். உங்கள் முன் வைக்கவேண்டிய இலட்சியங்களையும், அவற்றை அடைவதற்கு எடுக்க வேண்டிய நடவடிக்கைகளையும் புரிந்து உணர்ந்து கொள்ளும் முயச்சியிலேயே நீங்கள் அனைவரும் இந்த ஐந்து நாட்களையும் கழித்திருப்பீர்களென நம்புகிறேன். சில மாதங்களுக்கு முன்னர் சேவா தள அங்கத்தவர்களின் அனைத்து இந்திய மகாநாடு நடத்தினோம். அப்போது சேவா தளங்கள் தம் கடமைகளை ஆற்றவும் பொறுப்புக்களை நிறைவேற்றவும் உதவக்கூடிய பல முடிவுகள் எடுக்கப்பட்டன. உங்களில் பெரும்பாலானோர் அந்த மகாநாட்டுக்கும் சமூகம் அளித்திருந்தீர்கள். இந்தக்கூட்டங்களில் நடக்கும் விடயங்களை அக்கறையாகப் பொருட்படுத்தவேண்டும். அத்துடன் கூடுதலாக அறிவைப் பெறவேண்டுமென்ற உண்மையான ஆவல் உங்களை ஒவ்வொரு கணமும் உந்த வேண்டும். இந்த நாட்டிலே பெரும்பாலான மகாநாடுகளில் நடப்பது போல, தனிப்பட்ட தொடர்புகளையும் சமூகக் கலப்புறவுகளையும் அதிகரித்துக்கொள்ள இவைகள் பயன்படுத்தப் படக்கூடாது. இங்கே நடைபெற்ற கருத்துப் பரிமாறுதல்களின் பெறுபேறாக எடுக்கப்பட்ட முடிவுகளும், வரையப்பட்ட திட்டங்களும் செயலாகப் பரிமளிக்காவிட்டால், நீங்கள் உங்களின் பொன்னான நேரத்தையும், பணத்தையும் வீணாக்கியதாகவே முடியும். நேரத்தை வீணாக்குவது வாழ்க்கையையே வீணாக்குவதற்கு ஒப்பானது. பணத்தை வீணாக்குவது ஒரு தீய பழக்கம்.

உங்களுடைய மாவட்டங்களுக்குத் திரும்பிச் சென்று, இங்கே சிபாரிசு செய்யப்பட்ட நடவடிக்கைகளைச் சாதனா பாவத்தோடு மேற்கொள்ளும்படி அங்குள்ள சாதாரண அங்கத்தவர்களுக்கு நீங்கள் ஊக்கம் அளிக்க வேண்டும். அங்கத்தவர்களுக்கு காரியங்களை செவ்வனே விளக்கி உங்கள் முன்மாதிரிமூலம் அவர்களுக்கு ஊக்கம் பிறக்கச் செய்ய இயலாது போகின்றபட்சத்தில் இந்த ஆராய்வுகளும், ஆலோசனைகளும் அவமாகிப் போகும். இங்கே பங்கு கொண்டவர்களின் அனுபவங்களிலிருந்து பெறப்பட்ட படிப்பினைகளில் தேர்ந்து தேறுவதற்கு நீங்கள் கவனமாகவும், முழு மூச்சாகவும் முயன்றிருக்கிறீர்கள் என்று நம்புகிறேன். அதன் பயனாக உங்களுடைய வட்டாரத்தில் உள்ள தொழிலாளர்களை ஒன்று திரட்டி, அவர்களுடைய செயல் முறைகளையும், வேலைத் திட்டங்களையும் ஒப்பேற்றுவதற்கான உள்ளார்ந்த சமர்ப்பணம், பயபக்தி, திடசங்கற்பம் ஆகியவற்றை அவர்களிடம் வேரூன்றச் செய்ய உங்களால் முடியும் என்றும் நம்புகிறேன்.

ஒரு குறிப்பை உங்கள் உள்ளங்களில் தெளிவாக வைத்திருக்கவும். சேவா தளத்தையும், அதன் குறிக்கோளையும் பற்றிய

உங்கள் மனோபாவம், போக்கு ஆகியவற்றை நீங்கள் முதலில் கவனமாகக் கணிக்க வேண்டும். சேவைக்கு அவசியமான கைத்திறன்களையும், மனப்பான்மையையும் தேடிக் கொள்ளும் ஆர்வமும், ஆத்மிக இலட்சியமும் உங்களிடம் உண்டா என்று பரிசோதித்துப் பாருங்கள். நீங்கள் சேவா தளப் பிரிவுகளை வழிநடத்த இருக்கிறீர்கள். ஒழுங்கு முறைக்கு அடங்கிய ஒரு சீடனாக இருந்தால் தான் நீங்கள் வெற்றிகரமான ஒரு தலைவனாக முடியும். பணிவு தான் சேவா தளத் தலைவரின் இலட்சணமாகும். அகங்கார சிம்மாசனத்திலிருந்து கீழிறங்க மறுத்து மற்றவர்களுக்கு ஆணைகள் பிறப்பிக்க முடியாது. எஜமானர்களாகும் வாய்ப்பை ஈட்டுவதற்கு உத்தமமான ஊழியனாக இருந்தாக வேண்டும். விரும்பத்தகாத சக்திகளை நீங்கள் சேவா தளத்திலிருந்து களைந்து தள்ள வேண்டும். அதற்கு நீங்கள் உங்களை எல்லாச் சிறுமைகளுக்கும், பட்சபாதங்களுக்கும் மேம்பட்டவராக்க வேண்டும்.

சாதனையின் கடுமைகளுக்கு ஈடாக ஒருத்தருக்கு வலிவூட்டும் விதத்தில் அனைத்து இந்திய மகாநாட்டில் தனி மனித சாதனையான ஜபம் அல்லது தியானத்துக்கு அதிகப்படியான அழுத்தம் இடப்பட்டிருந்தது. ஒருவேளை நீங்களும், சேவா தளப் பிரிவுகளுக்கு ஜப தியானத்தின் முக்கியத்தைப் பற்றி ஏற்கெனவே பல இடங்களில் கற்பித்து இருப்பீர்கள். இங்கே சமுகம் தந்திருக்கும் 200 சேவா தளப்பிரதிநிதிகளில் எத்தனை பேர் தினசரி கொஞ்ச நேரத்தையாவது ஜபத்திலோ, தியானத்திலோ செலவிட்டிருப்பீர்கள்? யாருமே இல்லை என்று நான் சொன்னால் அது தவறாக இருக்கும் என்று கருத வேண்டாம். மாநிலத் தலைவர்களோ, மாவட்டத்தலைவர்களோ, மாவட்ட சேவா தள அமைப்பாளர்களோ எனது கூற்றைப் பிழை என்று எடுத்துரைக்கட்டும்! நீங்களே கடைப்பிடிக்காத போது என்ன அதிகாரம் அல்லது அனுமதியோடு நீங்கள் மற்றவர்களுக்குப் போதிப்பது? மற்றவர்களைத் தனிப்பட்ட சாதனைகளில் ஈடுபடும் படிகேட்கும் போது உங்களிடம் மெய்யான அந்தரங்க சுத்தி இருக்குமா? தனி மனித சாதனை ஒரு எதிர்மறை மின் முனை (நெகடிவ்போல்). சேவை ஒரு உடன் பாட்டு மின் முனை (பொஸிடிவ்போல்). இரண்டு முனைகளுக்கும் சம்பந்தம் உண்டாகும் போது தான் பயன் கிடைக்கிறது. இந்த அரங்கத்திலுள்ள மின் குமிழ்களுக்கு மின் சாரத்தை எடுத்துச் செல்லும் கம்பியை பிளாஸ்டிக் சுற்றி மூடியிருக்கிறது. பிளாஸ்டிக் உறை உடல், செப்புக் கம்பியான மனம் தெய்வீக தத்துவத்தைக் கொண்டு சென்று தொடர்பு கொள்பவர்களுக்கு எல்லாம் உதவுகிறது. சாதி, சமய, நிறபேதமின்றி அன்பின் ஒளியை எங்கும் பரப்ப வேண்டுமாயின் மனம் அந்தத் தத்துவத்தினால் ஒளியூட்டப் பெற்றிருக்க வேண்டும்.

நிறுவனத்தின் ஏனைய ஒவ்வொரு பிரிவும் யூகமாகவும், தாமதமின்றியும் சேவா தள உறுப்பினர்களால் உபகாரம் செய்யப்படுவதால் எல்லாப் பிரிவுகளிலும் சேவா தளமே பெரிதும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். அதன் நடவடிக்கை, அனைத்தையும் தழுவியுள்ளது. சேவா தளம் பஜனை மண்டலிக்கும், மகிளாவிபாக்குக்கும், பாலவிகாஸுக்கும், ஏன் சமித்திக்கும் கூட தேவை உணர்ந்து உதவவேண்டியிருக்கிறது. இந்தத் துறைகள் அனைத்திலும் தனது கடமைகளை நிறைவேற்ற இயலும் விதத்தில் அதற்கு விசேட பயிற்சி தரும் எல்லாத்திட்டங்களையும் சேவா தளம் வரவேற்க வேண்டும்.

நீங்கள் கலந்தாலோசித்த பிரச்சனைகளில் ஒன்று இளைஞரை எப்படி சேவா தளத்தினுள் கவர்வது என்பது. உங்களுடைய ஆர்வம், உங்களுடைய பணிவு, மற்றவர்களின் துன்பத்தைப் பற்றிய உங்கள் விழிப்புணர்வு மட்டுமே அவ்வியல் போடொத்த ஆன்மாக்களை நிறுவனத்துள் இழுத்துவிட வல்லதாகும். எல்லாவற்றிற்கும் மேலாக, சாதனையினால் சுத்திகரிக்கப்பட்ட இதயத்திலிருந்து, அன்பின் ஒளியில்

நிறைந்து மென்மையாக, கனிவாக வெளி வரும் ஊக்கமூட்டும் ஆதரவான வார்த்தைகள் இளைஞரை அமோகமாகக் கவரும்.

இந்தச் சந்தர்ப்பத்தில் இன்னொரு விசேஷமான காரணியையும் நீங்கள் கவனத்துக்கு எடுக்க வேண்டும். சாயி நிறுவனத்தின் ஒவ்வொரு உறுப்பினரும் இதைக் கட்டாயமாக மனத்தில் வைத்திருக்க வேண்டும். சத்திய சாயியிடம் அசைக்க முடியாத நம்பிக்கை உடையவர்களால் மட்டுமே இங்கு தீட்டப்பட்ட திட்டங்களை நிறைவேற்ற முடியும். ஆத்ம விருத்திக்கு உண்மையான ஆதாரம் சிரத்தையே. சேவா தளத் தலைவர்கள் கூட இந்தப் பற்றுறுதியைப் பெற்றிருக்கவில்லை என்பதை நானறிவேன். அவர்கள், ஆன்மிகத் துறையின் குருமாராகவும், மாபெரும் ஆசான்களாகவும் தங்களைப் பிரசித்தப் படுத்துபவர்களின் பின்னல் இங்கும் அங்குமாக ஓடுகிறுர்கள். இந்த ஊசலாட்டக்காரர்கள் பற்றி இராம கிருஷ்ண பரமஹம்சர் கூறிய கதையை நினைத்துப்பாருங்கள். ஒரு கமக்காரனுக்குத் தனது வயற் காணியிலே கிணறென்று தேவைப்பட்டது. ஒரு நிலயத்தில் 15 அடி ஆழத்துக்கு கிண்டிப் பார்த்துவிட்டு, பிறகு இன்னோர் இடத்தில் கிண்டினன். அந்த இடத்திலும் 15 அடி கிண்டிப் பார்த்துச் சலித்துப்போய் மூன்றுவது இடத்திலும் 15 அடி தோண்டிப் பார்த்தான். அங்கேயும் தண்ணீரைக் காணமுடியவில்லை. இவ்விதம் அந்த வயல் முழுவதும் ஒரே பொத்து வேலையாகக் குன்றும் குழியுமாக இருந்தது. அவன் மட்டும் முதல் நிலயத்தில் விடாது முயன்றிருந்தால் வெற்றி கண்டிருக்க முடியும். வயலும் நாசத்திலிருந்து காக்கப் பட்டிருக்கும். இது போலவே அற்ப சொற்ப நம்பிக்கையுடைய சேவா தளத் தலைவர்கள் போலியாகச் சித்து புரிபவர்களிடமும், என்னல் ஆட்கொள்ளப்பட்டதாகப் பாசாங்கு செய்பவர்களிடமும் கவரப்பட்டுத் தங்கள் நேரத்தையும், சக்தியையும், பணத்தையும், அசட்டுத்தனமான, வரட்டுத்தனமான நாட்டங்களில் வீண் விரய மாக்குகின்றுர்கள். நீங்கள் வேண்டும்போது சாட்சாத் சுவாமியே உங்கள் முன்னிலையில் நிற்கையில் போலிகளின் பின்னல் ஏன் ஓடுகின்றீர்கள்? மற்றவர்கள் வழிகாட்டுதலை எதிர்பார்க்கக் கூடிய இந்த ஆட்களின் மத்தியில் ஏற்படும் தடுமாற்றத்தின் பயனுக சில இடங்களில் சாதாரண உறுப்பினர்கள் குழம்பித் திகைக்கிறுர்கள். தடுமாற்றத்தினுல் வழிப்பாதையில் வெறும் குலுக்கலும் துள்ளலும் நிறைவதுதான் மிச்சம்.

ஒரு தடவை உத்தவன் கிருஷ்ணனின் தூதுவனுக கோபிகள் மத்தியில் வந்தான். ஆத்மிக நியமங்களுக்கு அடிப்படையாகவுள்ள தத்துவத்தை அவர்களுக்கு உபதேசிக்க, தான் வந்ததாக எடுத்து உரைத்தான். யோக வித்தையில் அவர்களைப் பிரவேசஞ் செய்து வைப்பதாகச் சொன்னுன். சர்வவியாபியாய் கிருஷ்ணன் இருப்பது எப்படி, ஏன் என்று தன்னுல் விளக்க முடியும் என்றுன். ஆனுல் அவர்கள் அவனுடைய பேச்சைக் கேட்க மறுத்து விட்டார்கள். அவர்கள் சொன்னுர்கள்; "எங்களுக்குரியது ஒண்டியாக ஒரு மனம் மட்டும்தான். அதைக் கிருஷ்ணனுக்கு அர்ப்பணித்து விட்டோம்." நாங்கள் அறிந்தது ஒரு மனதான பக்தி மட்டுமே. எங்களுக்கு மேலும் மனங்கள் இருந்தால், ஒன்றை உன்னுடைய தத்துவத்தினுல் நிறைவு செய்யக் கூடியதாய் இருக்கும். இரண்டாவதை உன்னுடைய யோகத்தினுலும், மூன்றுவதை உன்னுடைய விளக்கங்களினுலும் நிறைத்து விடலாம். எனவே தயவுகூர்ந்து புறப்பட்ட இடத்துக்குத்திரும்பிப் போவாயாக.

ஒருமுறை அனந்தப்பூரில், ஒரு விளையாட்டுப் போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்குப் பரிசில்கள் வழங்கும்படி போட்டியை ஏற்பாடு செய்தவர்களால் கேட்கப்பட்டேன். பரிசில்கள் என்பதற்குத் தெலுங்கில் "பகுமதி" என்று பெயர். அந்தச் சொல்லுக்கு "பலமனங்கள்" என்று இன்னொரு அர்த்தமும் உண்டு. அந்தக் கூட்டத்தில் நான் கூறியதாவது, "உங்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு மனது உண்டு. அது

எத்தனையோ தொல்லைகளை உண்டாக்குகிறது. உங்களிடம் இருக்கும் அந்த ஒரு மனமே எவ்வளவுக்கு எவ்வளவு ஏக்கத்தையும், கவலையையும் ஏற்படுத்துகிறபோது ‘‘பல மன’’ங்களைத் தரும்படி என்னைக் கேட்க வேண்டாம். ஏகமனதான பக்தியோடு ஆண்டவனை ஏத்தி வணங்கக் கற்றுக் கொள்ளுங்கள். அப்புறம் உங்களுடைய மனது உபகாரமாயிருக்கும்; இடையூறாக இருக்காது.’’

உங்களை மாயம் செய்து பலதாய்த் தென்படும் அந்த ஒன்றைக் குறிப்புணர்வதே எல்லாச் சாதனைகளையும் போல சேவா சாதனைக்குமுரிய முடிவு என்பதை நினைவில் இருத்தவும். சேவா சாதனையை ஒரு வாழ்க்கை முறையாகக் கைக்கொண்டால் தான் அது பயனைத்தர முடியும். ‘‘பன்மை’’யை ‘‘மெய்’’ என்று நம்புவதற்குச் சாதனை தேவையில்லை. புல்லை வளர்க்க முற்பட்டால் நிலத்தைத் திருத்தி, வேலிகட்டி, பசளை இட்டு, நீர் இறைக்கத்தேவையில்லை. உணவாகத் தக்க தானியத்தை அறுவடை செய்யும் ஆர்வம் இருந்தால் மட்டுமே உழுதல், நடுதல், நீர் விடுதல், பசளையிடுதல், வேலி கட்டுதல் ஆகிய சாதனை முக்கியமாகின்றது.

ஒவ்வொருவரிடமும் இறைவன் பிரதிஷ்டை செய்யப்பட்டிருப்பதைக் காணவும். உயிர்வாழும் ஒவ்வொரு உடலையும் ஆலயமாகக் கொண்டிருக்கும் எங்கும் நிறை ஆண்டவன் உங்கள் சேவை மூலம் போற்றிப் பூஜிக்கப்படவேண்டும்.

ஏகநாதர் காசியிலிருந்து இராமேசுவரத்துக்கு யாத்திரை மேற்கொண்டார். சாட்சாத் இராமபிரானாலேயே இராமேசுவரத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்ட சிவலிங்கத்துக்கு, சாஸ்திரங்களில் இட்ட பிரகாரம் அபிஷேகம் செய்வதற்காக, அவர் புனித கங்கை நீர் நிறைந்த ஒரு குடத்தைச் சுமந்து வந்தார். ஏகநாதரும் அவருடைய கூட்டத்தாரும் தங்களுடைய புண்ணிய குறிக்கோளை அடைவதற்கு ஒரு சில நாட்களே எஞ்சியிருந்தபோது, அவர் பாதையோரத்திலே ஒரு கழுதை தாகத்தினால் செத்துக்கொண்டிருப்பதைக் கண்டார். அது துடி துடிக்கும் காட்சியைக் கண்டு பொறுக்காமல் ஏகநாதர் புனித கங்கை நீரை அந்தக் கழுதையின் வாயில் ஊற்றினார். அது அந்தப் பிராணிக்குப் புத்துயிர் தந்தது. அது எழுந்து அசையக் கூடியதாக இருந்தது. ஏகநாதரின் நடவடிக்கையைக் கண்டு அவர் சிஷ்யர்கள் பிரமித்துப் போனார்கள். ஆயிரக் கணக்கான மைல்களுக்கு மேலாக எத்தனை எத்தனை நாட்களாகத் தோளிலே சுமந்து வந்த கங்கையை ஏன் அசம்பாவிதமாகப் பாவித்தீர்கள் என்று கேட்டார்கள். ஏகநாதர் பதிலளித்ததாவது; ‘‘புண்ணிய தீர்த்தம் தலையாய பயனுக்கே உபயோகிக்கப்பட்டது. அதைப் பருகியது கழுதை அல்ல; அந்தக் கழுதை உடலில் குடிகொண்டிருக்கும் இராமேசுவரரே பருகினார். இறைவன் என்னிடம் ‘‘நான் தாகத்தால் வருந்துகிறேன். இனி மேலும் ஏன் நீரைச் சுமந்து செல்கிறாய், என் தாகம் தீர அதை ஊற்றி விடு என்று கூறினான்.’’

‘‘ஈசாவாஸ்யம் இதம்சர்வம்’’ எல்லா உயிரினங்களிடத்தும் இறைவன் உறைகிறான் என்று சாற்றுகிறீர்கள். அந்தக் கூற்றை நடைமுறையாக்க வேண்டி வரும்போது உங்களுடைய நம்பிக்கை அற்றுப் போகவே, அதற்குச் சமாதானங்கள் கண்டு பிடிக்கிறீர்கள். இசை ஞானியான தியாகராஜர் பாடினார். ‘ஓ! ராமா, நீ எறும்பிலும் இருக்கிறாய், அண்டசராசரத்திலும் இருக்கிறாய் பிரம்மா’’ அந்தக் கீதத்தைப் பாவ ரசனையோடு பாடுகிறீர்கள். ஆனால் தியாகராஜரைப்போல் நம்பிக்கை வைக்கிறீர்களா? பிரம்மா நான்முகத்தோடு உங்கள் முன் காட்சி தந்தால் அந்தத் திவ்வியானந்தத்தில் ஒரு நிலைப்பட்டு லயித்துப் போவீர்கள். ஆனால் ஓர் எறும்பு உங்கள் முதுகில் ஊர்ந்தால் உங்களுக்கு இருப்புக் கொள்வதில்லை. அதை ஒரு பக்கம் தட்டிவிட மாட்டீர்கள்; நசித்துச் சாக்காட்டுகிறீர்கள்.

சின்னஞ் சிறு எறும்புக்குக் கூட உபகாரஞ் செய்யும் நாட்டு வழக்கங்களை எங்கள் பண்பாட்டில் கொண்டிருக்கிறோம். பெண்கள் வீட்டு முற்றத்தைச் சுத்தஞ்செய்து அரிசி மாவினால் கோலம் போடுகிறார்கள். அவர்கள் இல்ல முன்றிலை அழகு படுத்துகிறார்கள். அத்தோடு எறும்புகளுக்கும் தீனி அளிக்கிறார்கள். அடைக்கலங் குருவிகள்கூட அந்த மாவிலே உணவு கொள்ளுகின்றன. ஆனால் இன்று சேவா அம்சம் அலட்சியம் பண்ணப்பட்டு விட்டது. எறும்புகள் தின்னாத சுண்ணாம்பினாலோ, சுண்ணக் கட்டியினாலோ கோலங்கள் போடப்படுகின்றன.

சேவா சாதனை அனுதினமும் தியானம் செய்வதை ஒரு மனிதனுக்கு அவசியமாக்குகிறது. உலகத்தையும் அதன் கவர்ச்சிகளையும் சரிவரக் கணிப்பதற்கு மனம் கட்டாயம் பயிற்றப்படவேண்டும். பசியினால் வாடிய ஒரு நாயின் மேல் இரக்கப்பட்டு, ஒரு செல்வந்தன் அதற்கு ஒரு வட்டில் நிறையச் சோற்றைப் போட்டான். அடுத்த நாளும் அதே நேரம் அந்த நாய் அவனுடைய வீட்டுக்கு வந்தது. மூன்று வருடங்களுக்கு மேல் இது தொடர்ந்து நடந்தது. கடைசியில் அந்த நாயின் மேல் அவனுக்கு சலித்து வெறுத்து அதை வீட்டுக்கு வராமல்விரட்டியடிக்க முடிவு பண்ணினான். ஆனால் நாயை வராமல் செய்வதற்கு வாய்ப்பாகக் கையாளும் வழி என்ன என்று குழம்பினான். ஒரே வழி அதற்குத் தீன் போடுவதை நிறுத்துவதுதான். தற்போது மனமும் புலனிச்சைகளால் போஷிக்கப்படுகிறது; தியானத்தின் போது பிரவேசித்து கவனத்தை இழுக்கிறது. உலகப் பாடுகளினால் ஊட்டம் கொடுக்கப்படுவதால் மனம் நிலை கொள்ளாமல் ஆக்கப்படுகிறது. வேறுபட்ட ஒரு வாழ்க்கைக் கிரமத்தைப் பின் பற்றினால் மனத்தை வசப்படுத்தி உன்னத குறிக்கோள்களை மதிக்கக் கற்பிக்க முடியும்.

எப்போதும் உயர்ந்த குறிக்கோள்களிலேயே மனத்தைச் சுறு சுறுப்பாக ஈடுபடுத்துங்கள். அப்போது அது உங்கள் மார்க்கத்துக்கு ஒரு தடையாக இல்லாமல் பயனுள்ள கருவியாகச் செயல்படும். குரங்குகளைப்பிடித்து அவற்றைக் காட்சிப் பொருள்களாகப் பயன் படுத்திப் பிச்சையெடுக்கும் மக்களைப் பார்த்திருப்பீர்கள். குரங்குகள் மரங்களின்மேலே தாவுவதிலும் கீழே நழுவுவதிலும் பிரிய முடையவை. அவர்கள் வீட்டுக்கு வீடு குரங்குகளைக் கொண்டு சென்று, தரையிலே ஒரு கோலை நாட்டி, கம்பிலே ஏறு, கம்பிலே இறங்கு என்று அவைகளை விளையாடச்செய்வார்கள். மனத்திற்கும் அதன் ஆற்றல் அத்தனையையும் கவரத்தக்க விதத்தில் ஏதாவது வேலை கொடுக்கப்பட வேண்டும். நீங்கள் தியானத்தில் ஈடுபட்டிருக்கும் போது மனத்துக்கு ஒரு காவலாளியின் கடமையைக் கொடுக்கும்படி நான் யோசனை கூறுகிறேன். அது மூக்கின் நுனியில் உட்கார்ந்து கொண்டு ''ஸோ'' என்று உள்ளே போய், ''ஹம்'' என்று வெளியே வரும் ஒவ்வொரு மூச்சையும் கவனித்துக் கொள்ளட்டும்.

மனம் இந்தக் காவல் முறையில் நல்ல நிதானமடைந்தவுடன், அதாவது ஒரு ஐந்து நிமிட நேரத்தில் உங்கள் இதயத்திலும் கூடத்திலும் நிலவும் மோனத்திலே நீங்கள் தியானத்தை ஆரம்பிக்கலாம். இறைவனின் உருவப் படத்தை அல்லது அசையாத ஒரு சுடரை (தீபச்சுடர்) உங்கள் முன் வைத்துக்கொள்ளவும். நீங்கள் கையாண்டு நன்மை பெறக்கூடிய தியான முறையைக் கொஞ்சம் விரிவாக விபரிக்கிறேன். ஜோதியைத் திறந்த கண்களோடு சில நிமிடங்கள் அவதானிக்கவும். பின்பு அந்த ஜோதி உங்களுக்குள் உள்ளதாகக் கற்பிதம் செய்யவும். உங்கள் இதயத்திலே, இதயக் கமலத்தின் மையத்திலே அந்த ஒளியை உணர்ந்து கொள்ளுங்கள். அடங்கலும் ஒளியை நகர்த்த நிச்சயம் செய்யுங்கள். உதர பாகம், அவயவங்கள், கண்கள், செவிகள், நா, இது முதலான எல்லாம் உடல்பூராவும் ஒளியூட்டப்பட்டதாக உணரவும். அந்த ஒளிதான் பேரன்பின் ஒளியென்று பெருமிதம் அடையுங்கள். அது பகைமையை

விலக்குகிறது. அந்தகாரத்தையும், ஐயத்தையும் நீக்குகிறது. எல்லாம் தெய்வீகம் என்பதை வெளிப்படுத்துகிறது.

பிறகு அந்த ஒளி உங்கள் ஊனுடம்பைச் சுற்றி நின்று வியாபித்து அயலவர்களையும், பந்து மித்திரர்களையும், வேண்டாதவர்களையும்கூட சூழ்ந்து கொள்வதாகக் காட்சியில் காணுங்கள். ஒவ்வொரு வஸ்துவும் அந்தத் தெய்விக ஒளிப் பிரவாகத்தில் மூழ்கி இருக்கிறது. ஈசவாஸ்யம் இடம் சர்வம். இவையனைத்தும் இறைவனல் இலங்குகின்றன. இதுவே பேரானந்தப் பெருநிலையாகும்.

இப்போது அந்த ஒளி உங்கள் கண்களில் நிறையும்போது அவைகள் தூய்மைப் படுத்தப்பட்டதாக உணர வேண்டும். அவைகள் இனிமேல் தீய காட்சிகளை நாடிப்போக மாட்டா. அந்த ஒளி நாவிலே அன்பாய் மிளிரும்போது இனிமேல் கடும் சொற்களை உச்சரிக்கும் உத்தேசம் இல்லை என்று முடிவு செய்யுங்கள். கரங்கள் இனிமேல் பொல்லாச் செயல்களில் பிரியப்படமுடியாது. கால்கள் இனிமேல் அருவருப்பான சூழலுக்கும் இடங்களுக்கும் போகமுடியாது.

இவ்விதமாக நீங்கள் மனம் குவித்து நோக்கிய அந்த ஒரு ஜோதி உங்கள் உள்ளத்தையும் உடலையும் சுத்திகரித்து அதன் பிரகாசத்தை விரித்து உங்களுடைய சுற்றுடல் முழுவதையும் உள்ளடக்குகிறது. தீபாவளியன்று ஒரு தீபத்திலே நூற்றுக் கணக்கான தீபங்கள் ஏற்றப்படுகின்றன. அந்த முதல் தீபம் நூற்றுக்கணக்கான தீபங்கள் அதிலிருந்து ஒளி நயம் பெற்ற பின்பும் ஆரம்பத்திலிருந்த அதே பிரகாசத்தோடுதான் எரிகிறது. அந்தப் பூர்வ ஜோதிக்கு எந்தக் குறையும், அழிவும் இல்லை. மிச்சமெல்லாவற்றையும் ஊக்குவிக்கும் அந்த ஜோதி அல்லது சுடர்தான் பரப்பிரம்ம ஜோதி. அதனல் ஊக்குவிக்கப்படுபவை ஜீவனஜோதிகள், தனிவியக்திகள். ஒன்றிலிருந்து மற்றையது பரிணமித்தாலும் உள்ளபடிக்கு இந்த இரண்டு ஜோதிகளும், சுடர்களும் ஒன்றுபோல்வனவே. இதை உற்றறிவதுதான் தியானத்தின் முற்றும். ஆகவே இந்த வகையான ஜோதி உபாசனை சாதகர்களுக்கு மிக மேலானதாகச் சிபாரிசு செய்யப்பட வேண்டியிருக்கிறது. நீங்கள் விரும்பினல், உங்கள் இதயக் கமலத்திலே ஜோதிச் சுடரைப் பிரதிஷ்டை செய்யும்போது உங்களுக்கு உலப்பில்லா இன்பத்தைத் தரும் உங்கள் தெய்வத்தை அதனுள் உருவகம் பண்ணி, அந்த ஜோதியின் பிறப்பிடமாக அவரைத் துதி செய்யலாம். அந்த உருவம் உங்களையும் உங்களைச் சுற்றியுள்ள உலகத்தையும் சுத்திகரிக்கும் ஒளி மயத்தின் ஒரு பகுதியாகவும் ஆகலாம்.

பல்வேறு ரகமான தியானங்களைப் போதித்துக் கொண்டு அண்மைக் காலத்தில் பெருகி வரும் போதர்களினல் வழிதவறி நடத்தப்பட்டு விடவேண்டாம். அவைகள் பெரும்பாலும் செயற்கையான, மேற்போக்கான அப்பியாசங்களாகும். இந்தப் போதகர்கள் எடுத்துரைப்பதுபோல் தியானத்திலிருப்பதும், உடலுக்கும் மனத்துக்கும் அதீதமாவதும் அத்தனை சுலபமாகவும், இலகுவாகவும் இருந்தால், இந்தத் தேசத்து ரிஷிகளும், ஞானிகளும் தியானத்தில் சித்தி பெற்றுச் சமாதி நிலையை அடைவதற்காக தங்களை விருத்தி செய்வதிலும், அகங்காரத்தை வெல்வதிலும் வருடக் கணக்காகக் காலத்தை செலவிட்டது ஏன் என்பதைமட்டும்நிதானித்துப் பார்க்கவேண்டும். இப்போதெல்லாம் உடலுணர்வை சொற்ப நிமிடங்களில் அகற்றி, சிரமமின்றி சமாதி நிலையை வருவித்துக்கொள்ள முடியும் என்று கோரிக்கை விடுக்கப்படுகிறது. மேற்கத்தைய மக்களைப் பீடித்துள்ள விரக்தியும், மனத்தளர்வும் காரணமாக, அப்பேர்ப்பட்ட கோரிக்கைகள் அங்கே மிதமிஞ்சி எடுபடுகின்றது. ஆனல் உடலுணர்வு அற்ற நிலையை தியான சித்தி என்று கணக்கிட இயலாது. உணர்வாதீத உச்ச மட்டத்தில் ஒருத்தர் ஆத்மானந்தத்தை அனுபவிக்க வேண்டும். வெறுமனே மனம் குவிந்தநிலை சில புலனனுபவங்களோடு மட்டும் சம்பந்தமுடையது. உணர்வு புலன்களை விட்டு மேலெழும்

போது ஒருமையடைகிறது. உணர்வு நிலை யின் மேல்மட்ட எல்லையை எட்டும்போது தியானம் ஆரம்பிக்கின்றது. கருமம் குவிந்த மனத்துக்கு உட்பட்டது. வழிபாட்டுக்கு ஒருமைநிலை தேவை. தியானத்துக்கு முன்னோடி அறிவு. சேவா தள உழைப்பாளிகள் என்ற வகையில் நீங்கள் இந்த மூன்றையும் பண்படுத்திக்கொள்ள வேண்டும். உழைப்பு வழிபாட்டுக்கு வழிவிட, வழிபாடு ஞான மாக விளைகிறது.

உழைப்பு ''மலர்''. காலப்போக்கில் அதன் இதழ்கள் வீழ்ந்துபோக மிருதுவான, நுண்ணிதான பொருளாய்ப் பிஞ்சு வெளிப் படுகிறது. இது ''வழிபாடு'' அப்புறம் காய் வளர்ந்து இன்சுவையால் நிறைகின்றது. இது ''ஞானம்''. ஆகவே சேவா கருமத்தை தகுந்த உற்சாகத்தோடு மேற்கொள்ளுங் கள். மற்றவர்களின் துயரத்தை ஆற்றவும், உங்களுக்கு மனச் சமாதானத்தைச் சம் பாதிக்கவும் நீங்கள் பின்பற்ற வேண்டிய கர்ம மார்க்கம் இதுவே. ஞான மார்க்கம் இறுதியாக போகும் இடத்தில் மாத்திரம் நிற்கும் ''நேர்ப் பயண வண்டி''. பக்தி மார்க்கம் அதே திசையில் செல்லும் மற்ற மற்றப் புகைவண்டிகளிலும் தொடுக்கப் பட்டுப் போகுமிடத்தை அடையும் ''நேர்ப் பயணப்'' பெட்டி. கர்ம மார்க்கம் ''சாதரண வண்டி''. அதற்கு மாறுதல்களும், இடைத் தரிப்புகளும் அவசியம். அதற்குரிய விதத்தில் அறிவுப் பயிற்சி தருவதால் அது வும் பிரயோசனமாகின்றது. உங்களைப் படுத்தும் அநியாயமான, அக்கிரமமான வேகங்களை கட்டுக்குள் அடக்குவதற்குக் கர்ம மார்க்கத்தை அல்லது காரிய ஈடு பாடுகளைத்தான் கதியாகக்கொள்ள வேண் டும். கர்ம வினைப் பயன்களை கர்மத்தினால் மட்டுமே துடைக்க முடியும். எனவே சேவா தள உறுப்பினர்களுக்குக் கர்ம மார்க்கம் தான் புனிதமான பாதையாகும்.

மூன்று வழி வகையான உழைப்பின் மூலம் சத்ய சாயி நிறுவனம் விஸ்தரிக்கப் படமுடியும் - தனிப்பட்ட சாதனை, சமூகப் பணி, அனைத்துலக அன்பை அபிவிருத்தி செய்தல், நீங்கள் எல்லோரும் மெய்யாகவே அந்த அன்பின் சொரூபங்கள். நாங்கள் இதுவரை நடத்தியுள்ள அநேக மகாநாடு களிலும் இந்தச் சேவா தள அமைப்பாளர் களின் மகாநாடு மிகுந்த புனிதமும் மிக்க உட்பொருளும் உடையது. இங்கு முடிவெடுத்த ஒவ்வொரு தீர்மானத்தையும் கட்டு திட்டமாகவும், உள்ளப் பற்றோடும் செய்கை முறையில் அமுலாக்கி, அதன் விளைவாக இந்த நிறுவனத்தை மனுக்குலம் அனைத்துக்கும் பயனுக்கும்படி உங்களைப் பணிக்கிறேன்.

*

# சேவா தள அமைப்பு
## ( ஆடவரும் மகளிரும் )

1. பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா சமித்தி ஒவ்வொரு மாவட்டத்திலும், பட்டினத்திலும் அல்லது இவற்றில் ஒன்றில் ஸ்ரீ சத்திய சாயி 'சேவா தள'த்தை நிறுவி நடவடிக்கையை தொடங்கிவைக்கும். ஒவ்வொரு பட்டினத்திலும் சேவா சமித்தியின் அதிகாரத்தின் கீழும் ஒவ்வொரு சேவா தள அமைப்பே இயங்கும். சேவா தளம் சேவா சமித்தியின் ஒரு அங்கமாகும். அதற்கு தனித்துவமான இடமோ சுதந்திரமான இருப்போ இல்லை.

2. சேவா சமித்தி இல்லாத இடத்தில், மாநிலத்தலைவர், சேவை நடவடிக்கைகளுக்காக மட்டும் ஒரு சேவா தளத்தை உண்டாக்கலாம். ஆனாலும் சேவா சமித்தி ஒன்று உருவாக்கப்பட்டவுடன் சேவா தளம் அதன் அங்கமாகிவிடும்.

3. மாநிலத் தலைவர் ஆண்கள் சேவா தளத்துக்கும், பெண்கள் சேவா தளத்துக்கும் தலா ஒரு அமைப்பாளரை நியமிப்பார். இவர்கள் மாநில இணை அமைப்பாளர்களில் ஒருவராக இருப்பார்.

4. மாநில சேவா தள அமைப்பாளர் ஆண்களுக்கும் பெண்களுக்கும் தலா ஒருவராக மாவட்ட சேவா தள அமைப்பாளரை (தேவைப்படின்) நியமிப்பார்.

5. சேவா சமித்தி, உறுப்பினர்களில் ஒருவரை அமைப்பாளராக நியமனம் செய்து சேவா தளத்தை உருவாக்கும். அவர் மாவட்ட சேவா தள அமைப்பாளரிடமிருந்து வழிகாட்டுதலைப் பெறுவார். இதே விதத்தில் சமித்தியின் மகிளாவிபாக் ஒரு பெண் மணியை மகளிர் சேவா தளப் பிரிவுக்கு அமைப்பாளராக நியமிக்கும்.

## 6. நிர்வாகம்:

மாநில அமைப்பாளரின் (ஆண்சரி, பெண்சரி)
தொழிற்பாடு பொதுவில் கீழ்க் காண்பனவற்றை அடக்கியுள்ளது.

ஏ) ஸ்ரீ சத்திய சாயி நிறுவனத்தின் மாநிலத் தலைவரோடு தொடர்பு கொண்டு நாட்டிலுள்ள சேவா சமித்திகள், மகிளாவிபாக்குகள் அனைத்தையும் பற்றிய விபரங்களை முகவரி உட்பட பெற்றுக்கொள்ளுதல்.

பி) நாட்டிலுள்ள சேவா சமித்திகளின் தலைவர்களிடமிருந்து சேவா தள இயக்கத்தைப் பற்றிய முழுத் தகவல்களையும் பெறுதல். எங்காவது சேவா தளம் இல்லாத இடத்திலுள்ள பிரச்சனைகளை நிச்சயித்து அந்த சமித்திகளுக்கு சேவா தளத்தை உருவாக்க உதவுதல்.

சி) மாவட்டத்தில் அதிக சேவா தளப்பிரிவுகள் இருந்தால் அந்த மாவட்டத்துக்கு சேவா தள அமைப்பாளரை நியமித்தல்.

டி) மாவட்டத்திலுள்ள சேவா தள நடவடிக்கைகளை நடத்துவதில் மாவட்ட சேவா தள அமைப்பாளருக்கு வழிகாட்டுதல்.

ஈ) வருடத்துக்கு ஒரு முறை சேவா தள அங்கத்தவர்களின் மகாநாடு ஒன்றைக் கூட்டுதல்.

7. **மாவட்ட சேவா தள அமைப்பாளரின் (ஆண், பெண்) தொழிற்பாடு பரந்த விதமாக அடக்குவதாவது:**

ஏ) வெவ்வேறு சமித்திகளிலுள்ள சேவா தள உறுப்பினர்களுக்கு சேவா தளப் பயிற்சியும், வேலைத்திட்டமிடல் முகாமும் ஏற்பாடு செய்தல்.

பி) சமித்திகளிலுள்ள சேவா தளப் பிரிவுகளுக்கு அவைகள் மேற்கொள்ளத் தக்க நடவடிக்கை பற்றிய விபரங்களைத் தெரிவித்தல்.

சி) நடவடிக்கைகளை மேற்பார்வையிடுதல்.

டி) ஸ்ரீ சத்திய சாயி சேவா தளத்தின் நடைமுறையையும், அதன் பணிகளைப் பயன் படுத்தும் முறைகளையும் மாவட்ட அதிகாரிகளுக்கும் சமூகத் தலைவர்களுக்கும் தெரியப் படுத்துதல்.

ஈ) அமைப்பாளர் சேவா தள அங்கத்தவர்களுள் ஒரு உப-குழுவை நியமிக்க வேண்டியிருக்கும். அதேவேளை அங்கத்தவர்களிடத்து வழிநடத்தும் வல்லமையைக் கட்டியெழுப் பவும் வேண்டியிருக்கும்.

எப்) மாவட்டத்திலுள்ள சமித்தி அல்லது சேவா தளப் பிரிவுகளின் அமைப்பாளர்களுடைய உதவியோடு அந்த மாவட்டத்தில் திட்டமிடுதல் முதல், நிறைவேற்றுதல்வரை மேற் கொள்ளப்படும் சகல நடவடிக்கைகளுக்கும் மாவட்ட சேவா தள அமைப்பாளரே பொறுப்பாவார்.

8. **ஒரு சமித்தியின் அல்லது பிரிவின் அல்லது பிரதேசத்தின் சேவா தள அமைப்பாளரின் தொழிற்பாடுகள்:**

ஏ) சம்பந்தப்பட்ட சமித்திக்கு அல்லது மகிளாவிபாக்குக்கு அவர் பொறுப்புடையவராக இருந்தாலும், அவ்வப்போது மாவட்ட சேவா தள அமைப்பாளரினுல் விடுக்கப்படும் வழியுணர்த்தலுக்கு இணங்கவே செயற்படவேண்டும்.

பி) சேவா தளத்தில் பிரவேசிக்கும் மனுதாரர்கள் மாவட்ட அமைப்பாளர்களினுல் கொடுக் கப்படும் பயிற்சி முறையும் வேலைத்திட்டமும் பற்றிய படிவத்தை நிரப்பவேண்டும். (அனுபந்தம் 1 இல் கொடுக்சப்பட்டிருக்கும் மாதிரியைப் பார்க்கவும்.)

சி) வேண்டிய தகுதியின் பிரகாரம் சேவா தள அங்கத்தவர்களை, சேவா தள அமைப்பாளர் பயிற்சி முறைக்குத் தெரிவுசெய்வார்.

டி) சாதாரணமாக ஆண், பெண் அமைப்பாளர்கள் வேறெந்த வகையிலும் சாயி நிறுவனத்தில் பதவி வகிக்கக்கூடாது. இந்த விதி சம்பந்தப்பட்ட மாநிலத் தலைவரினுல் தவிர்க்க முடியாத சந்தர்ப்பங்களில் தளர்த்தப்படலாம்.

9. **தகைமை:**

சேவா தள அங்கத்தவர்களான ஆண்களும் பெண்களும் சாதாரணமாக 16 உக்கும் 50 உக்கும் இடைப்பட்ட வயதுப் பிராயத்தினராக இருப்பர். அவர்கள் அந்த வட் டாரத்தின் நிரந்தர வசிப்பாளர்களாக வேண்டும்.

10. ஒரு பூரண சேவா தள அமைப்பை உருவாக்குவதற்கு ஒவ்வொரு சேவா தள உறுப் பினரின் தரமும் உயர்த்தப்படுதல் அத்தியாவசியமாகும். அதற்கு அந்த உத்தேச உறுப்பினர்கள் மேலே பந்தி 8 (பி) இல் குறிப்பிடப்பட்ட படிவத்தை நிரப்புமுதல் கீழ் காண்பனவற்றைக் கருத்தில் கொள்ளல் வேண்டும்.

(i) ஒவ்வொரு சேவா தள அங்கத்தவரும் (ஆண், பெண்சரி) தனது சுய சாதனையான ஜபம், தியானம் சாயி நூல் கற்றல், ஆகியவற்றைத் தீவிரமாக்க வேண்டும், அத்தோடு குடும்ப சாதனையையும் அதிகரிக்க வேண்டும். (அனுபந்தம் 2ஐப் பார்க்கவும்)

(ii) ஒவ்வொரு சேவா தள அங்கத்தவரும் (ஆண், பெண்சரி) நாளொன்றுக்கு இரண்டு மணி நேரத்தைத் தனிப்பட்ட சமூகசாதனைக்கு அர்ப்பணிக்க வேண்டும். (அனுபந்தம் 2 ஐப் பார்க்கவும்) அத்தோடு வாரத்தில் நான்கு மணி நேரத்தைக் கூட்டிச் சமூகசாதனைக்கு அர்ப்பணிக்க வேண்டும். (அனுபந்தம் 3 ஐப் பார்க்கவும்)

11. சேவா தளப்பிரிவுக்கு வேண்டிய குறைந்த பட்ச ஆட் தொகை மேற் கொள்ளப்படும் நடவடிக்கைகளின் தேவையைப் பொறுத்து தீர்மானிக்கப்படும்.

12. நிறுவனம் நடத்தும் பகிரங்கக் கூட்டங்களுக்குத் தேவையான தொண்டுகளுக்கு சேவா தள அங்கத்தவர்களே அடிப்படையான ஆளணியாக இருப்பார்கள். சேவா தளம் பிரதானமாக சேவை நடவடிக்கைகளிலேயே சிந்தையுடையதாக இருக்கவேண்டும். சட்ட விதிகளின் தேவைப் பிரகாரம் ஒவ்வொரு உறுப்பினரும் பயிற்சி பெற்றாக வேண்டும். அத்தோடு மாவட்ட சேவா தளத்தினால் நடத்தப்படும் பயிற்சிக்கும் வேலைத்திட்டமிடல் முகாமிற்கும் வரவு தரல் வேண்டும்.

## 13. பயிற்சி முறையும் வேலைத்திட்டமிடல் முகாமும்

### பயிற்சி:

ஏ) பயிற்சித்திட்டத்தில் அடங்கியுள்ள விடயங்கள் வருமாறு:

1. திவ்விய உபதேசத்தைக் கற்றறிதல் (இந் நூலில் கொடுக்கப்பட்டுள்ளது)
2. ''சேவா சாதனை'' என்ற நூலில் கொடுக்கப்பட்டுள்ள நான்கு திவ்விய உபதேசங்களைப் பின்பற்றுதல்.
3. மத ஒப்பு நோக்கும் சர்வதர்ம ஒருமைப்பாடும்.
4. சாயி போதனையும், நாளாந்த வாழ்க்கைக்கு அதன் அனுசரணையும்.
5. அற்புதங்கள் எதற்காக?
6. பல்வேறுபட்ட சேவை நடவடிக்கைகளின் விபரங்கள் (நடவடிக்கைகளுக்குரிய செய்வழிக் குறிப்புகளையும் பார்க்கவும்)
7. முதல் உதவிப் பயிற்சி
8. சேவா தளக் கையேட்டைப் படித்தல்

### வேலைத் திட்டமிடல்:

பி) ஒவ்வொரு சேவா தள உறுப்பினரும் தினம் இரண்டு மணி நேரத்தை சுய சாதனைக்கும், வாரத்தில் நான்கு மணி நேரத்தை சமூக சாதனைக்கும் அர்ப்பணிக்க வேண்டும்.

2வது அனுபந்தத்திலுள்ள வழிகாட்டு நெறிகளிலிருந்து ஒவ்வொருவரும் (ஆணும், பெண்ணும்) தனது சுயசாதனைக்குரிய அம்சங்களைத் தெரிவு செய்யவேண்டும். ஆணும் சகலவற்றிலுமுள்ள 'ஒருமை'யை உள்ளுணர்வில் அறிவதையே கருத்தாகக் கொண்ட அனைத்தையும் அடக்கிய அன்பைப் பயில்வதற்கும் அந்தப் போதனையைப் பரப்புவதற்கு

மான குறிக்கோளை அடைவதற்கு அவரவர் (ஆணே, பெண்ணே) தலையானதாகக் கருதும் ஏதாவது சாதனை அம்சத்தைச் சேர்த்துக் கொள்வதற்கு ஒவ்வொருவருக்கும் சுயாதீனம் உண்டு.

அடுத்ததாக கூட்டாகவோ அல்லது சேவா தள அங்கத்தவர்களின் குழுக்களாகவோ சேர்ந்து திட்டமிட்ட நடவடிக்கைகளில் வாரத்தில் நான்கு மணி நேரத்தை அர்ப்பணிக்க வேண்டும். இதற்கு ஒவ்வொருவரும் தனது மனோ, தேக வலிமைக்கு ஏற்றபடி செய்துமுடிக்கத்தக்க வேலைத் தொகுதிகளையே தெரிவுசெய்ய வேண்டியிருக்கும். ஒவ்வொரு நடவடிக்கைகளுக்கும் கொடுக்கப்பட்டிருக்கும் உதவி குறிப்புகளின் உதவியோடு ஒருவர் தனது முடிவை நிதானித்து அதைத் தலைவருக்குத் தெரியப்படுத்த முடியும். அவசியம் ஏற்படும் போதெல்லாம் ஒருவர் தான் தெரிவு செய்த செயல்வகைகளில் நடைமுறைப் பயிற்சி எடுக்கவேண்டும்.

## 14. சேவா நடவடிக்கைகளும் உதவிக் குறிப்புகளும்:

சேவை நடவடிக்கைகள் பரந்த விதத்தில் கீழ்க்காணும் நான்கு தலைப்புகளில் தொகுக்கப்படலாம்.

(i) கல்விப் பயிற்சி நடவடிக்கைகள்.

(ii) ஆரோக்கிய சுகாதார நடவடிக்கைகள்.

(iii) நாட்டுப்புறச் சேவை நடவடிக்கைகள்.

(iv) தகவல் பணியகம், சாயிநூல், விற்பனை, கண்காட்சி, நூல்நிலையம் முதலான பிற சேவை நடவடிக்கைகள்.

இந்த நடவடிக்கைகள் கிரம முறையாகவும் கால பருவத்துக்கு ஏற்றதாகவும் பிரிவு படுத்தப்படலாம். இவை, கிடைக்கக்கூடிய மனித சக்திக்கும், குறிப்பிட்ட செயல்களின் தேவைகளுக்கு ஏற்பவும் தொகுக்கப்படவேண்டும்.

மூன்றுவது அனுபந்தத்திலுள்ள உதவிக் குறிப்புகள் பல்வேறு நடவடிக்கைகளையும் அவற்றை நடத்தும் விதத்தையும் சித்தரிக்கின்றன.

## 15. நாட்டுப்புறச் சேவை நடவடிக்கைகள்:

இனிமேல் எந்தவிதமான நாட்டுப்புற நடவடிக்கைகளும் ஸ்ரீ "சத்திய சாயி சேவா நிறுவனம்" என்ற பெயரிலேயே மேற்கொள்ளப்படும். சேவா தளம் அல்லது மகிளவிபாக், சமித்தி அல்லது பஜனை மண்டலியின் நடவடிக்கை என்று நாமமிடப்படமாட்டாது. நாட்டுப்புற வேலைத்திட்டம் பிறவற்றேடு கீழுள்ள திட்டங்களையும் கொண்டுள்ளதாயிருக்கும்.

(i) கிராமங்களில் ஆரம்பமட்டக் கல்வித்தாபனங்கள், தொழில் முறைப்பயிற்சி நிலையங்கள், வளர்ந்தோர் கல்வி நிலையங்கள் இல்லாத இடங்களில் அவற்றை நிறுவுதல்.

(ii) நாட்டுப்பக்கங்களில் குறுக்குப்பாதைகள், கிராமத் தெருக்கள், நடைபாதைகள் அமைத்தல். கிராமங்களின் சுகாதார வசதியைச் சீர்ப்படுத்த கழிவுநீர், வடிகால் வசதிகளை அமைத்தல்.

(iii) குடிநீர் வசதிகளை முன்னிட்டு கிணறுகள், குழாய்க்கிணறுகள் அமைத்தல். நாட்டுப்புற மக்களுக்கு நீரைச் சுத்தம் செய்யும் முறையைக் கற்பித்தல், அதற்கு அவசியமான சாதனங்களை உதவுதல். இருக்கும் கிணறு, குளங்களைச் சுத்திகரித்துப் பாவிக்கத் தக்கதாக்குதல்.

(iv) கால்நடை விருத்திக்கு வசதிகளை அளிக்கும் பொருட்டு மத்திய மிருக வைத்திய நிலையங்கள், செயற்கையாகச் சினைப்படுத்தும் நிலையங்களை நிர்மாணித்தல். கால்நடை விருத்தி, மாட்டுப்பண்ணை, அபிவிருத்தி, கோழிப்பண்ணை, பயிர்ச்செய்கை, மீன் வளர்ப்பு ஆகியவற்றில் விவசாயிகளுக்கு உதவி புரிதல்.

(v) நவீன விவசாய முறையிலும், விவசாய இயந்திர உபகரணங்களை உபயோகிப்பதிலும் விவசாயிகளுக்குப் பயிற்சி அளித்தல்.

(vi) மதச்சார்பற்ற அடிப்படையில், குலம், கோத்திரம், சமயம் என்று பாகுபடுத்தாமல் நாட்டுப்புற வட்டாரங்களிலுள்ள வறிய குடிகளின் சாமானிய அடிப்படைத் தேவைகளைப் பொதுவாக ஈடுசெய்தல்.

மேற்குறிப்பிட்ட நாட்டுப்புற அபிவிருத்திக்கான வேலைத்திட்டத்தில் தனிமனிதரும், சங்கங்களும் பங்கு பெறச் சௌக்கியப்படுத்துவதற்கு, சத்தியசாயி டிரஸ்ட், இந்திய அரசின் நிதி அமைச்சிலுள்ள வருமான வரித் திணைக்களத்தின் மத்திய நேர் வரி அறவீட்டுச் சபையிடம் 1961-ம் வருடத்திய வருமான வரிச்சட்டத்தில் 35CC A என்ற சரத்திற்கமைய, அனுமதிகோரி அணுகியது. சபை 14-2-1979 என்று தேதியிட்ட F No. 203/432/78-IT AII என்ற இலக்கமுடைய கடிதத்தில் அதற்கு ஒப்புதல் அளித்துள்ளது. நாட்டுப்புற அபிவிருத்திக்கான விரிவான தனித்திட்டம் உரிய அதிகாரசபையிடம் அனுமதிக்காகச் சமர்ப்பிக்கப் பட்டுள்ளது.

# அனுபந்தம் 1

## ஸ்ரீ சத்திய சாயி சேவா தள அங்கத்துவ மனுப்பத்திரம்

பெயர்:.................................................... வயது:....................

வசிப்பிட முகவரி: ..........................................................................

..........................................................................

..........................................................................

சமித்தி மே/பா: ..........................................................................

அலுவலகம்/கல்லூரி:....................................................................

தொழில்:....................................................

விசேட பயிற்சிகள் ஏதாவது இருப்பின்:..................................................

விசேட உளச்சார்புகள்: ....................................

நான் கீழே தருவது எனது உறுதிமொழியாகும். ஸ்ரீ சத்திய சாயி சேவா தளத்தில் நான் ஓர் அங்கத்தவராகத் தெரிவு செய்யப்படின் எனது அங்கத்துவ, எனது சுயசாதனையை விஸ்தரிப்பதாகவும், தீவிரப்படுத்துவதாகவும் இருக்கும் என மதிப்பேன்.

(i) நாளொன்றுக்குக் குறைந்த பட்சம் இரண்டு மணி நேரத்தை தனிப்பட்ட சமூக சாதனைக்கு அர்ப்பணிக்கச் சித்தமாயிருக்கிறேன்.

(ii) வாரத்தில் நான்கு மணி நேரத்தைக் கூட்டு சமூக சாதனைக்கு அர்ப்பணிக்கச் சித்தமாயிருக்கிறேன்.

(iii) நாள்தோறும் ஜபம், தியானம், சாயிநூல் கற்றல் - இவை அடங்கிய சுயசீரமைப்புத் திட்டத்தை நியமித்தபடி கடைப்பிடிப்பேன்.

(iv) சட்டவிதிகளின் நியதிப்படி பயிற்சியைப் பூரணமாக மேற்கொள்வேன். மாவட்டப் பயிற்சிக்கும், வேலைத்திட்டமிடல் முகாமுக்கும் வரவு தருவேன்.

(v) கிராம முன்னேற்றம் உட்பட சமித்தியினுலோ அதன் கிளைப்பிரிவினுலோ மேற்கொள்ளப்படும் அனைத்து வேலையிலும் எனது கடமைகளையும் செயல்களையும் செவ்வனே ஆற்றுவேன்.

திகதி:

விண்ணப்பதாரரின்
கையொப்பம்

# அனுபந்தம் 2

## தனி மனித சாதனை, குடும்ப சாதனை, சமூக சாதனை

சேவா தளத்தின் தனி இலட்சணம் அங்கத்தவர்கள் சாதனையின் ஒழுங்கு விதிகளைத் தாங்கள் கடைப்பிடிப்பதில் முன்மாதிரியாக விளங்கி, மற்றவர்களை வழிநடத்தும் தகுதியையும் திறமையையும் எய்துவதாகும்.

பகவானின் போதனைகளை நித்தம் நினைவிருத்தவும் அவற்றை நாளாந்த வாழ்வில் பயில்வதற்கும், ஓர் அங்கத்தவர் ஆத்மிக ஒழுங்கு விதி என்னும் சாதனைக்கு உட்பட வேண்டும். அந்தச் சாதனை தினசரி வாழ்வோடு ஒருமித்து உலக வாழ்வின் அம்சமாகிவிட வேண்டும். மேலும்,

நிறுவனத்தில் பதவி வகிப்பவரோ, சாயி தொண்டரோ, பகவானுடைய உபதேசத்தை நினைப்பிலிருத்துவதற்காக, முனைந்து நின்று ஆத்மிக சாதனையில் குடும்பத்தை ஓர் அங்கமாக்கவும் வேண்டும்.

## தனிப்பட்ட சாதனையும் குடும்ப சாதனையும்

இந்த நோக்கில், குடும்பத்தை ஒரு அங்கமாக்கவும், நிறுவனத்தின் வேலைப் பணியிலே பகவானின் தெய்வீகம் பிரதிபலிக்கும் விதத்தில் தான் (ஆணோ, பெண்ணோ) முன்வந்து எடுத்துக்கொள்ளும் வேலையில் உண்மையான உழைப்பாளியென ஆகவும், உகந்த சாதனை எது என்பதை ஒருவர் சிந்திக்க வேண்டும். தனிப்பட்ட விதத்திலும், குடும்பமாகவும் கடைப்பிடிக்கக்கூடியதான அம்சங்கள் பொருந்தும் சாதனையில் குறைந்தபட்சமாக அடங்குபவை என்னென்ன என்பதைக் கீழ்க்காண்பவை குறிப்பிட்டு உதவுகின்றன.

(i) தினசரி தியானம் – ஜபம்.

(ii) வாரத்தில் ஒரு தடவை குடும்ப அங்கத்தவர்கள் அனைவரோடும் குடும்ப பஜனை.

(iii) குடும்ப அங்கத்தவர்களைப் பஜனை நிகழ்ச்சியிலும் பாலவிகாஸ் வேலைத் திட்டத்திலும், தியான ஜபத்திலும் பங்குபெற இசையச்செய்தல்.

(iv) (ஏ) சுற்று வட்டாரத்தில் பாவிக்கக்கூடியதாக ஒரு முதலுதவிப்பெட்டி வைத்திருத்தல்.

(பி) பாவிக்கப்படாது, தேவைப்படாது இருக்கும் மருந்து வகைகளை, மருந்து வங்கிக்காகச் சுற்று வட்டாரத்திலிருந்து சேகரித்தல்.

(v) சமித்தியினுலோ, மகிளவிபாக்கினுலோ ஏற்பாடு செய்யப்படும் பொதுப் பஜனை அல்லது நகர சங்கீர்த்தனத்தில் மாதத்தில் ஒரு தடவையாவது பங்குபற்றுதல்.

(vi) சாயி நூல்களைக் கிரமமாகக் கற்றல்.

(vii) ஒவ்வொருவரோடும் இதமாகப் பேசுதல். குடும்பத்து அங்கத்தவர்களோடாவது அதை ஆரம்பித்தல்.

(viii) ஒருவர் இல்லாதவிடத்து அவரைப்பற்றி (ஆணே, பெண்ணே) புறங்கூறவேண்டாம்.

(ix) நாராயண சேவை - ஏழைகளுக்கு உணவளிப்பதற்கும், உணவை விணுக்காத பழக்கத்தை உண்டுபண்ணுவதற்குமாக கொஞ்சத் தானியத்தை (அரிசியை) நாள்தோறும் ஒதுக்கிவைக்கவேண்டும். இவ்விதத்தில் குடும்பத்தில் தனிப்பட்டவிதமாகவும் கூட்டாகவும் ஆத்மிக விருத்தி காண்கிறது. பகவானின் உபதேசத்தைப் பரப்பும் புனித கடமைக்குப் பணிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள் மேற்படி வைபவத்தை நடத்தத் தகுதியுடையவர்களாவர்.

## தனிப்பட்ட சமூக சாதனை

பிரிவுகளிலே ஒன்ருன சேவா தளத்தின் அங்கத்தவர்கள் தங்கள் சாதனையின் பகுதியாக அன்ருடம் இரண்டு மணி நேரம் கிரமமாக மேற்படி சாதனையில் பங்குபெற வேண்டும் என்பதை வலியுறுத்துவது அவசியமாகின்றது. பின்வருவது தனிப்பட்ட சமூக சாதனைக்கான நடவடிக்கைகளுக்குரிய பட்டியலாகும். இவற்றிலிருந்து தெரிவுசெய்து நாளொன்றுக்கு இரண்டு மணி நேரத்தை சேவா தள அங்கத்தவர்கள் செலவிடலாம்.

## தனிப்பட்ட சமூக சாதனை நடவடிக்கைகளுக்குரிய பட்டியல்

### 1. குருதி இனம்: (அட்டைகள்)

குடியிருப்பாளர்களுக்குத் தங்கள் இரத்த இனங்களை அறிந்துகொள்ள உதவிசெய்து, வைத்திய அதிகாரியினுல் முறைப்படி கையொப்பமிடப்பட்ட அதற்குரிய அட்டைகளை அவர்களுக்கு விநியோகிக்கவும். ஆள் பதிவேடு ஒன்றை பாவனைக்காக வைத்திருக்கவும். சுற்று வட்டாரத்திலுள்ள ஒருவர் காயமுற்று இரத்தம் தேவைப்படும் பட்சத்தில் அவர் உதவிக்கு உரியவராக உங்களை எதிர்பார்ப்பார். சிலவேளைகளில் மக்கள் இரத்த தானம் செய்யத் தயங்குகிருர்கள். அதையிட்டு அவர்கள் அஞ்சுகிருர்கள். ஆகவே தங்களுடைய இரத்த இனத்தை அறிந்திருக்கவேண்டிய அவசியத்தை உணரப்பண்ணுவதன் மூலமாக, படிப்படியாக அவர்களை மெதுவாகப் பயிற்றுவிக்க வேண்டும். இந்த இலட்சியத்தைப்பற்றிய அறிவுக்கு அவர்களை ஒருவர் இதை அறிந்து வைத்திருக்கட்டும். அதனுல் தேவை ஏற்படும்போது அவர் இரத்த தானம் செய்யும் வாய்ப்பு உண்டு.

## 2. உணவு விடுதிகள்:

இந்திய வழக்கம் அப்படி. பண்டங்களை விற்பவர்கள் எங்கும் நிறைந்து இருக்கிறார்கள். தின்பண்டம் விற்கும் கடைகளும் அப்படியே. உடற் தெம்புக்கும், வளர்ச்சிக்கும் எண்ணங்களுக்கும் உணவு ஆதாரக் கூறுகும். உங்கள் வட்டாரத்திலுள்ள இடங்களை (கடைகளை) சோதித்துப் பார்த்து அவற்றைச் சீர்படுத்தக்கூடிய வழிகளைக் கண்டுபிடிக்கவும். நிர்வாகக் கூட்டத்திலே அந்தக் கருத்தை சேவா தள அமைப்பாளரினால் ஊர்ஜிதப்படுத்திக்கொண்டு பின் அமுல் செய்யவும். வேறெவரும் சம்பந்தப்படவில்லை. அதனால் அகங்காரம் இல்லை. சமூக நலனை வேண்டுகின்றபோது நீங்கள் செலவு செய்கிற நிதியம் என்ன?

## 3 வடிகால் அடைப்பும் டி. டி. ரி. யும்:

மேற்கூறியதற்குச் சமமாக வாரத்திற்கு ஒரு தடவை வடிகால் நீரடைப்பு பிரச்சனை எங்கேனும் உண்டாகியுள்ளதா, அப்படியானால் எங்கே என்று கண்டுபிடியுங்கள். அதைப் பழுது பார்ப்பது மாநகரசபையின் வேலைதான். அவர்களுக்குத் தெரியப்படுத்தவும். தொலை பேசியிலே அவரோடு பேசி, சுகாதாரமான சூழலின் அவசியத்தை அவருக்குப் பதியப் பண்ணவும். இப்படிச் செய்வதால் உங்களுக்கு என்ன நஷ்டம். உங்கள் தன்நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதில் லாபம் கிடைக்கும். இங்கும் புகழ்ச்சி இல்லை. அகங்காரம் இல்லை. சமூகப் பொது நலனுக்காக பொருட்கள் விநியோகிக்கப்படும்போது நீங்கள் ஒரு தொண்டர் என்று அரச அதிகாரிகளுக்கு அறிமுகஞ்செய்து, அவர்களை வேண்டி, பண்டங்களை உரிய இடத் துக்குச் சேர்ப்பிக்கலாம்.

## 4. மருத்துவமனை பற்றிய தகவல்:

சமூகத்தின் வறிய பகுதியினருக்கு அண்மையில் உள்ள அரச மருத்துவமனைபற்றி அல்லது வேறு தர்ம மருத்துவ நிலையத்தைப் பற்றித் தெரியப்படுத்துங்கள். அவற்றில் இலவசமாகப் பரிசோதனைகள் செய்யும் வழியை அவர்களுக்குச் சொல்லிக்கொடுங்கள். நீங்கள் பணிபுரியும் வட்டாரத்தில் அந்த மருத்துவமனை இருந்தால் அதற்கு விஜயம் செய்து அந்த வைத்திய அதிகாரியைச் சந்திக்கவும். அரசாங்க வழிகளிலிருந்து மருந்துகளைப் பெறு வதில் அவரும் பிரச்சனைப்பட்டுக் கொண்டிருக்கலாம். நிறுவனத்தின் கூட்டங்களிலே இந்தத் தகவலை சேவா தள அமைப்பாளரிடம் தெரிவிக்கவும். கட்டை மீறிப்போக வேண்டாம். கட்டுப்பாட்டை நீங்களே விதித்துக்கொள்ளுங்கள். அதற்குள் நெகிழ்வாக இருங்கள். ஆனால் கட்டுப்பாட்டைக் கடைப்பிடிக்க வேண்டும்.

## 5. புத்தகமும் மானச சேவையும்:

வீட்டுக் கூடத்திலே உங்களுடைய விருந்தினராக இருப்பவருக்கு, அவரும் தெய்வீகத் தின் உருவமே என்று நினைத்து, பாபா பற்றிய நூல்களை வழங்குங்கள். வலுக்கட்டாயமாக அவரிடம் திணிக்கவேண்டாம். நீங்கள் வேறு ஏதாவது அவசரச் சோலியில் ஈடுபட்டிருக்கும் போது, அவர் தானே நூலை எடுத்து வாசிப்பார். உங்கள் எண்ணத்தின் செயல் இங்கே சேவையாகின்றது. நீங்கள் நம்புவது எதுவோ அதையே வழங்குகின்றீர்கள். இன்னொருத் தருக்கு உயர்வான மதிப்புகளின் நுழைவாயிலைத் திறக்கும் சந்தர்ப்பத்தை வழங்கும்போது நீங்கள் தூய்மையையும், உள்ளத்தின் உண்மையையும் வழங்குகின்றீர்கள்.

அறிவு வளம் சிறப்பாகப் பயன் கொள்ளப்படும்விதமாக, உங்கள் நூல்களை அயலவர் களுக்கு இரவல் கொடுக்கச் சித்தமாயிருங்கள். உங்களிடம் இருப்பதனால் புத்தகங்கள் எதனைச் சாதிக்கும்? அவைகள் உங்கள் புத்தக அலுமாரியை அலங்கரிக்கின்றன. அவ்வளவு தான். வேறெதுவுமில்லை. அவற்றை வெளியில் எடுத்து வையுங்கள். கைமாறி அனுப்புவதன்

மூலம் சேவையின் வாய்ப்பை அதிகரியுங்கள். உங்களுடைய அண்டை அயலவர் அவற்றை விலைக்கு வாங்க விரும்பினுல் அவருக்கு கொள்விலையில் பெற்றுத்தர ஒழுங்கு செய்யுங்கள்.

### 6. முதலுதவி:

சகல மருந்துகளுடனும் ஒரு பெரிய முதலுதவிப் பெட்டியை வைத்திருக்கவும். அதற்கும் மேலாக, அறிவித்தல் பலகை ஒன்றை வைத்து இன்ன நேரத்தில் நீங்கள் கிடைக்கக் கூடியதாக இருப்பீர்கள் என்று குறிப்பிடுங்கள். உங்களால் இது இயலாவிட்டால், வேண்டாம். இன்னெரு எளிதான வழி உண்டு. சிறிய கையடக்கமான ஒரு முதலுதவிப் பெட்டியை எடுத்துக்கொண்டு சேவை செய்வதற்குப் பஸ் தரிப்பிடத்துக்குச் செல்லுங்கள். நான் ஒரு மூடனு என்று நீங்கள் கேட்கலாம். இல்லை. இப்படிச் செய்வதால் நீங்கள் மூடனுகி விடுவதில்லை. பதிலாக அறிவுச் சிறப்படைகிறீர்கள். போவதற்கென்று உங்களை ஒப்படைத்து விடுகிறீர்கள் அல்லவா? இதுதான் உங்களுடைய சாதனையும், சரணுமாகும். எவரும் வந்து உங்கள் உதவியைக் கோராவிட்டால், பாதகமில்லை. யாரும் வராததும் நல்லதுதான். உங்களைச் சுற்றியுள்ள 'அவ'னுடைய உலகத்தில் எல்லாம் சேமமாக இருக்கிறது. 'அவன்' தான் அனுப்புகிறுன். நீங்களல்ல. அதனுல் உங்களை நீங்கள் அர்ப்பணித்தபொழுதே உங்கள் பணி முற்றுப்பெற்றுவிட்டது. இதுதான் நிஷ்காம சேவை.

### 7. வசதியற்ருேர்:

சைக்கிள் சவாரி விடுபவர்கள், செருப்புத் தைப்பவர்கள், நாவிதர்கள் முதலியோரை எல்லாச் சுற்றுப்புறங்களிலும் காணலாம். அவர்களை நேரிற் கண்டு பேச்சுக்கொடுங்கள். வெறுமனே உங்களுடைய பேச்சு அவர்களுக்கு ஆறுதல் தரும். அவர்களுடைய பிரச்சனைகளை அறிந்து உதவி செய்யுங்கள்.

### 8. உதவ முன்வருபவருக்கு உதவுதல்:

அநேகர் உதவி செய்ய விரும்புகிறுர்கள். ஆனுல் சொந்தப் பழக்கமும் ஆர்வமும் ஓரளவோடேயே இருக்கும். ஏதோ அற்பமாகச் செய்கிறுர்கள். அவர்களுக்கு அதுபோதும். ஒரு சந்தர்ப்பத்தை எடுத்துக்கொள்வோம். வெள்ள நிவாரண வேலையின்போது, பாதிக்கப் பட்டவர்களுக்குச் சப்பாத்தி தயாரித்துக் கொடுக்க விரும்புகிறுர்கள். ஆனுல் அதை மைய நிலையங்களுக்கு அனுப்பும் பொறுப்பை எடுக்கும் தூண்டுதல் இருக்காது. இந்த இடத்தில் தான் நீங்கள் முன்வருகிறீர்கள். துணைசேர்ந்து அவர் சேவைக்கு ஏற்பட்ட தடங்கல்களை அகற்றி உதவுகிறீர்கள். இவ்விதமே பாவித்த துணிகளுக்கும், மருந்துகளுக்கும், நூல்களுக்கும் உங்கள் உதவியை நல்குங்கள்.

### 9. சிறுவர்கள் மத்தியில் ஆற்றும் பணி:

எவ்வெவ்விடங்களில் சாத்தியமோ அங்கே சிறுபிள்ளைகளுக்கு திரைப்படக் காட்சிகளை ஏற்பாடு செய்யுங்கள். படம் பகவானைப் பற்றியே இருக்கவேண்டும் என்ற அவசியமில்லை. சுவாரஸ்யமான எந்த விடயமாகவும் இருக்கலாம். அதனுல் பிள்ளைகளின் கவனத்தை நீங்கள் ஈர்க்கக்கூடியதாக இருக்கும். பின்னர் பாலவிகாஸ் ஒழுக்கநெறிக் கல்வி வகுப்புக்கள் ஆரம்பிக்கும்போது அது உதவியாக இருக்கும்.

### 10. பஜனைகள் பற்றிய தகவல்:

பெரும்பாலானவர்களுக்கு பஜனைகளில் ஈடுபடுவதற்கு விருப்பம் உண்டு. ஆனுல், ஒன் றில் அவற்றைப்பற்றி அறிந்திருக்கமாட்டார்கள்; அல்லது பஜனைத் தினத்தைப்பற்றி மறதி

யாக இருப்பார்கள். சாயந்திரம் ஒரு பஜனை இருப்பதாகக் காலையில் அவர்களுக்குத் தெரிவியுங்கள். அவர்கள் மறந்துபோனாலும் மறுதடவையும் தெரிவியுங்கள்.

இதற்குச் சமமாக அனைத்து தகவலும் நியதிகளும் அடங்கிய ஒரு அட்டையும் நேரில் அவர்களுக்குக் கொடுக்கப்படலாம்.

**11. ஒலிப்பதிவு நாடா:**

இதன் மூலம் பஜனை ஒலிப்பதிவு நாடாக்களைப் பிரதி பண்ணும் வசதியைக் குடியிருப்பாளர்களுக்கு ஏற்படுத்துவதற்கு உங்கள் நேரத்தை வழங்குகின்றீர்கள். காலகெதியில் ஆத்மிக சூழ்நிலையைச் சிருஷ்டிக்க வீட்டிலே நாடாவுக்கும் ஒரு தனி இடம் ஏற்பட்டுவிடும்.

**12. நியநெறியினர்:**

உங்களுடைய அண்டை அயலிலுள்ள தீயசக்திகளை இனம் கண்டு கொள்ளுங்கள். தக்க நேரம் பார்த்து அவர்களை நேரில் சந்தியுங்கள். உங்களுடைய சொந்த நடத்தையாலும் பழக்கத்தாலும் அன்பாலும் அவர்களை மாற்ற முயலுங்கள். ஏன் இந்த வீண் தொல்லை என்று நீங்கள் வாளாவிருந்தால் வேறு யார் அவரை அணுகுவது? அவரை மாற்ற முயற்சிப்பது! 'அவனே' உங்களை அங்கே அனுப்புகிறான் என்பதை உணரத் தலைப்படும்போது 'அவனே' உங்களைக் காக்கவும் செய்வான் என்பதையும் சதா நினைவுபடுத்துங்கள்.

**13. வைத்தியசாலைகள் / தாபனங்கள் / பாடசாலைகள்:**

உங்கள் வட்டாரத்தில் இவற்றில் ஏதேனும் இருந்தால் அதன் அதிபரைச் சந்தித்து வாராந்தம் ஒரு மணிநேரம் அல்லது விருப்பப் பிரகாரம் உங்கள் சேவையை நல்க முன்வாருங்கள். தகவல்கள் கொடுப்பது, பாடம் சொல்லிக்கொடுப்பது அல்லது அவர்களுக்குப் பிடித்தமான ஏதாவது ஒரு பயனுள்ள வேலையில் உங்களை அவர்கள் ஈடுபடுத்தச் செய்தல்.

**14. பாடசாலைகளும் பண்டங்களை விற்பவர்களும்:**

பாடசாலைகளின் புறத்தே பட்சணங்களை விற்பவர்களைக் காணலாம். அவர்கள் தின்பண்டங்களை, என்ன நிலைமையில் எப்படித் தயாரிக்கிறார்கள் என்பதை நாமறியோம். அதைக் கண்டறிந்து, ஒருவரின் பிழைப்பைக் கெடுக்கும் உத்தேசமில்லாமல், பிள்ளைகளின் ஆரோக்கியத்தை முன்னிட்டு, அதிபரோடு பேச்சுவார்த்தை நடத்துங்கள். அவரின் குண இயல்பைக் குறிப்பறிந்து கொண்டு, அதற்கேற்ப அசட்டையாக இருப்பது இளம் பிள்ளைகளுக்கு எப்படித் தீங்கிழைக்கும் என்பதை எடுத்துக்காட்டுங்கள்.

**15. வாராந்தக் குறிப்பு:**

நீங்கள் துணிகரமும் உங்கள் செயலில் திட நம்பிக்கையும் உற்றவராக இருந்தால் பின்வரும் தகவலைக்கொண்ட ஒரு வாராந்தக் குறிப்பை சுற்று அறிவிப்பாக விடலாம்.

(ஏ) புதினப் பத்திரிகைகளிலிருந்து குறிப்புரைகள்: பின்வரும் திரைப்படங்கள் (பெயரைக் குறிப்பிடவும்) குறிப்பாகப் பிள்ளைகளுக்கு எந்தப் பெறுமதியும் இல்லாதவை. அவர்களுடைய இளம் உள்ளங்கள் மாசுறுமாதலால் அவர்களை அழைத்துச் செல்ல வேண்டாம் என்று வேண்டுகிறோம்.

(பி) புகைத்தலும் குடித்தலும் ஆரோக்கியத்துக்கும் பழுது. இவற்றைக் குறைப்பதே அறிவுடைமை. ஒரு நாளைக்குப் பத்து சிகரெட்டுகளைப் புகைத்தால் இன்றைக்குக் குறைத்து எட்டை மட்டும் புகையுங்கள்.

(சி) சிந்தனையைக் கிளறும் ஆத்மிகக் கருத்துக்கள் ;

இதன் எதிர்விளைவுகள் நானுவிதமாக இருக்கும். சிலர் ''எனக்குச் சொல்வதற்கு இவர் யார்?'' என்பார்கள்! மற்றவர்கள் அதைக் கைக்கொண்டபின் ''நல்லது. அவர் உங்களை எச்சரித்திருக்கிறார்'' என்பார்கள். விடயக் குறிப்புகள் தனிப்பட்ட கோதாவில் இல்லாத காரணத்தினால் நீங்கள் அவர்களுக்கு இந்த உறுத்தலை ஏற்படுத்தவே வேண்டும்.

# அனுபந்தம் 3.
## நடவடிக்கைகளுக்கான வழிநெறிகள்

### 1 ஆரோக்கியமும் சுகாதாரமும் :

ஆரோக்கிய, சுகாதார வேலைத்திட்டம் பலதிறப்பட்ட நடவடிக்கைகளைக் கொண்டிருப்பதால் பரந்த அளவில் அதை ஐந்து அணிகளாக வகுக்கலாம். ஒவ்வொரு அணிக்கும் ஒரு வகையான தொழிற்பாடு உண்டு. ஒவ்வொரு அணியும் தனது வரையறைக்கு உட்பட்ட வேலை விபரங்களிலும், அதனோடு சம்பந்தப்பட்ட ஆத்மிக உய்வுக்கு உழைக்க விரும்பும் பக்தர்களுக்கான வேலைத்திட்டத்திலும்தான் கருத்துடையதாக இருக்கும்.

(ஏ) பகவான் இளம் பிள்ளைகளின் விடயத்தில் அதிக அளவு முக்கியத்துவம் கொடுக்கிறார். எங்களுடைய நிறுவனத்தில் பாலவிகாஸ் பிள்ளைகள் பூரணமான அங்கமாக இருக்கிறார்கள். இந்த அணி சமித்திகளின் கிளைப் பிரிவுகளினால் இளம் பிள்ளைகளுக்கு வைத்தியப் பரிசோதனை செய்விக்க உதவிசெய்து, அதுபற்றிய குறிப்பேடுகளையும் வைத்துப் பரிபாலிக்கிறது. ஒரு குழந்தை குறிப்பிட்ட வியாதி ஒன்றினால் பிடிக்கப்பட்டிருப்பதைக் கண்டறியும் சந்தர்ப்பத்தில் பாலவிகாஸ் குழுவுக்கும், குழந்தையின் பெற்றோருக்கும் அதை அறியச்செய்யவேண்டும். பாலவிகாஸ் குரு குழந்தையின் உடல்நிலை தேறுவதைப் பற்றி ஒழுங்காகப் பெற்றோரிடம் தொடர்புகொண்டு அறியவேண்டும். மருந்துகள் வழங்க வேண்டுவதில்லை. வைத்திய நடவடிக்கைக்கு சிபாரிசு செய்துவிட்டு பின்னர் தொடர்ந்து அறியும் திட்டமே விதிக்கப்படுகிறது. பெரும்பாலான பெற்றோர் இலவசப் பொருட்கள் கொடுக்கப்படுவதை விரும்பமாட்டார்கள். அது அவர்களுடைய தன்மானத்தைப் பாதிக்கிறது. ஆகவே அது தவிர்க்கப்படலாம். குடும்ப நிலபரங்களைத் தெரிந்து வைத்திருக்கிற சந்தர்ப்பங்களில் மட்டும் பாலவிகாஸ் குரு மருந்துகள் வழங்குவதற்குப் பரிந்துரை செய்யலாம். முறைப்படியான ஆரோக்கிய வாழ்வு நோய்த் தடுப்பு ஆகியவற்றின் நன்மைகளை, சமித்தியின் மருத்துவத் தொண்டர்களைக்கொண்டு, அந்தக் குழந்தைக்கும், பெற்றோருக்கும் உணர்த்தும்படி செய்யவேண்டும்.

(பி) நோய் நொடிகளும் தேக அசௌக்கியமும் தடைப்பட்டு நிற்பதில்லை. அது ஒவ்வொருவரையும் வெவ்வேறு திறங்களில் அடைந்தே தீருகிறது. தங்களுடைய நகரங்களிலும் கிராமங்களிலும் அல்லது இரண்டில் ஒன்றில் வைத்தியத் தொண்டர்களை உடையவர்கள் உதவியை எதிர்பார்க்கும் மற்ற மற்றப் பாடசாலைப் பிள்ளைகளுக்கும் தாபனங்களுக்கும் தங்கள் சேவைகளை விரிவுபடுத்த வேண்டும். சங்கம் சார்பு என்று பாராமல் சேவையின் தேவையுள்ளவர்களுக்குத் துணைபுரியும் மனிதாபிமானத்தில் இந்த நடவடிக்கை ஆதாரப்பட்டிருக்கின்றது. இவ்விதமான நடவடிக்கைகள் எங்களுடைய ஆத்மிகச் சூழலின் எல்லைக்கோட்டை விசாலிக்க உதவுகின்றன.

(சி) இந்த அணி, சேவா தளம் வெவ்வேறு கிராமங்களிலும் வைத்தியப் பரிசோதனைகளை நடத்துவதற்குத் துணைசெய்கிறது. அத்தோடு தங்களுடைய சொந்தக் குடியிருப்புகளில் மருத்துவமனைகளை ஆரம்பிக்க விருப்பப்படுகிறவர்களுக்கும் உதவி புரிகிறது.

(டி) இந்த அணி அரச தொடர்புகளிலும், நடவடிக்கைகளை அரசோடு இணக்கப்படுத்துவதிலும் ஈடுபாடுடையது. மற்றைய அணிகள் அவ்வப்போது எதிர்நோக்கும் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு உதவுவதால் ஆரோக்கியம், சுகாதாரம் பற்றிய வேலைத்திட்டத்தில் இந்த அணியே பெரிதும் முக்கியமான அங்கமாகும். அதன் பிரதான கடமைகளாவன:-

(ஏ) வைத்தியசாலை விஜயம் உட்பட, வைத்தியசாலையோடு மருத்துவ நடவடிக்கைகளை இணக்கப்படுத்துதல். பலதடவைகளில் மற்றைய வைத்திய நிலையங்களுக்கு அல்லது தாபனங்களுக்கு சேவை ரீதியாக அல்லது தொண்டர்களாக உதவி தேவைப்படுவது உண்டு. உதாரணமாக வைத்திய அதிகாரிகளும் ஏனைய உத்தியோகத்தர்களும் மருத்துவ நிவாரண முகாம்களுக்குப் போவதைக் குறிப்பிடலாம். அந்தச் சந்தர்ப்பங்களில் தேவையாகும் உதவி குழுவிலிருந்தும் கிளைகளிலிருந்தும் அளிக்கப்படலாம்.

(பி) அரச அதிகாரிகளோடு இணைந்து செயல்படல்:- ஆரோக்கியம் பற்றிய விடயத்தில் பல்வகைப் பிரச்சனைகள் கிளைப் பிரிவுகளுக்கு உண்டு. அவற்றைக் கருத்தில் கொண்டு பொருத்தமான சூழ்நிலைகளை உண்டாக்க எத்தனிப்பது ஒரு கடமையாகும். இந்தப் பிரச்சனைகளில் சில இயல்பிலேயே பாரதூரமானவை. எங்களால் தீர்ப்பது முடியாத செயல். ஆனால் அதைச் சாதிக்கக்கூடிய அரச நிறுவனத்தின் கவனத்துக்குக் கொண்டுவர நாங்கள் முயற்சிக்கவேண்டும். அந்த வகையான பிரச்சனைகளை இந்த அணிக்கு ஒப்படைத்தால், அதன் பேரில் அணி முடிந்த அளவு கவனத்தைச் செலுத்தும்.

(ஈ) பின்வருவனபற்றியும் இந்த அணி கவனம் கொள்ளவேண்டும்:

(i) மருந்துச் சரக்குகள் தயாரிக்கும் கம்பெனிகளிலிருந்து மருந்துகள் சேகரித்தல்.

(ii) மருந்துச் சரக்கு விநியோகிக்கும் வியாபார நிலையங்களின்மூலம் மருந்துகள் சேகரித்தல்.

(iii) குழந்தைக்கு மேற்கொண்டும் வைத்திய பரிசோதனை தேவைப்படும்போது அடையாள அட்டைகள் முதலியன விநியோகித்தல்.

(iv) மைய நிலையங்களில் சேகரிக்கப்பட்ட மருந்துகளை ஒரு வைத்திய அதிகாரியின் மேற்பார்வையின்கீழ் தரம்பிரித்து கிளைப் பிரிவுகளுக்குப் பகிர்ந்து கொடுத்தல். ஆரோக்கிய சுகாதார வேலை இவ்விதம் ஒழுங்குபடுத்தப்பட்டால் ஒவ்வொரு பிரிவும் தத்தம் வட்டாரத்து நடவடிக்கைகளை இந்தமுறையில் நிர்வகிக்கும்.

## 2. இரத்த தானம்:

இரத்த வங்கியின் உதவியோடு குப்பிகளில் இரத்தம் சேகரிக்கும் முகாம்களை ஏற்பாடு செய்வதை விடவும், இந்தச் செயற்பாட்டுக்கு இன்னும் விசாலமான வரையறை உண்டு. அவசர வைத்திய நிலைமைகளின்போது இரத்தம் செலுத்துவது முதலானவை அடிக்கடி நாடப்படுகிறது. அத்தகைய ஒரு நெருக்கடியில் இரத்தம், இரத்த இனங்கள், இரத்த தானங்கள் முதலியவை பற்றிய அறிவு மிக உபகாரமாக இருக்கும். இதன் காரணமாக மேற்படி விபரங்களைப் பெறுவதற்கு வீடு வீடாக ஒரு மதிப்பீட்டு அளவையை மேற்கொள்ளலாம். அதன் பின்னர் இரத்தம் அளிக்க விரும்புபவர்களின் பெயர், முகவரி முதலியவற்றைக்

காட்டும் ஒரு பட வரைபை அவர்களின் இரத்த இனம் பற்றிய விபரத்தோடு, அவசர நிலைமைகளில் இரத்தத்தின் தேவை மோசமாக ஏற்படும் பிரதான வைத்திய நிலையங்களுக்கு சுற்றறிக்கையாக அனுப்புங்கள். அதன் பயனாக ஒரு நெருக்கடி நிலைமையின்போது வைத்திய நிலையங்கள் காலதாமதமின்றி நேரே இரத்ததானம் செய்பவர்களுடன் தொடர்புகொள்ள முடியும்.

---

**வீட்டுக்கு வீடு மேற்கொள்ளப்படும் அளவை மதிப்பீட்டுக்கு உபயோகிக்கும் படிவத்தின் மாதிரி கீழே பிரதிபண்ணப்பட்டுள்ளது.**

## பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா சமித்தி

### சேவா தள அங்கம்

**இரத்த தான அணி:** **பிரிவு இல.**

(இரத்தம் அளிப்பவர் வைத்திருக்க வேண்டியது)

உங்களுக்குரிய காலத்தின் ஒரு சில நிமிட நேரத்தில் உங்களால் மகோன்னதமான தானத்தைச் செய்ய முடியும்.

ஒரு ஆணுக்கோ, பெண்ணுக்கோ அல்லது ஒரு குழந்தைக்கோ உயிர் வாழ்வை அளிக்க முடியும்.

"இரத்த தானம் செய்து ஓர் உயிரைக் காப்பாற்றுங்கள்"

மனித இரத்தத்துக்கு மாற்றுப் பொருள் இல்லை.

உங்கள் உடல், இழந்த இரத்தத்தை 7 மணி நேரத்தில் மீளப் பெற்று விடுகின்றது.

உங்கள் நேரத்தில் ஒரு சில நிமிடங்களல்லாமல் உங்களுக்கு ஒரு செலவுமும் இல்லை.

இரத்தம் அளிப்பவருக்குக் கொடுக்கப்படும் அட்டை உங்களுக்கும் உங்கள் குடும்பத்துக்கும் இலவச இரத்த தானத்தை உரித்துடையதாக்குகின்றது.

நீங்கள் இரத்தம் அளிக்க விரும்பினால்;

(1) நீங்கள் 18க்கும் 55க்கும் இடைப்பட்ட வயதினராக இருக்க வேண்டும்.

(2) கடந்த இரண்டு வருடங்களுக்குள் செங்கமாரி நோயினால் பீடிக்கப்படாமல் இருந்திருக்க வேண்டும்.

(3) கடந்த இரண்டு வாரங்களுக்குள் அம்மைப் பால் கட்டாமல் இருந்திருக்க வேண்டும்.

(4) அண்மையில் இரத்தம் செலுத்தப்படாமல் இருந்திருக்க வேண்டும்.

(தொண்டர்களினால் சேகரிக்கப்படவேண்டியது)

(1) இரத்த தானம் செய்து ஓர் உயிரைக் காப்பற்ற விரும்புகிறீர்களா?

X (ஆம்) X (இல்லை)

(2) பெயர்: ............ வயது: ............

(3) வசிப்பிட முகவரி: ............ தொலைபேசி இல: ............

(4) தொழிலக முகவரி: ............ தொலைபேசி இல: ............

(5) உங்களுடைய இரத்த இனம்: ............

(6) உங்கள் குடியிருப்பில் இரத்த தான இயக்கம் ஒன்றை ஏற்பாடு செய்யும்போது இரத்த தானம் செய்ய இணங்குவீர்களா?

X (ஆம்) X (இல்லை)

(7) அவசர நிலையை முன்னிட்டு அண்மையில் உள்ள வைத்தியசாலை உங்களை அழைத்தால் இரத்தம் அளிக்க இசைவீர்களா?

X (ஆம்) X (இல்லை)

X உங்கள் தெரிவுக்குச் சரி போடவும்

## 3. நாராயண சேவை:

இந்த நடவடிக்கை ஆத்மிகமயமாக்கப்பட வேண்டும். அதற்கு தனிப்பட்ட சாதனையின் ஓர் அம்சமாகப் பிடி அரிசி எடுத்து வைக்கப்பட்டு, அப்புறம் ஒன்று சேர்க்கப்பட வேண்டும். அங்கத்தவர்களால் ஒரு பொது இடத்துக்குக் கொண்டுவரப்பட்டு மகிளவிபாகிடம் உணவு தயாரிப்பதற்கு ஒப்படைக்கப்பட வேண்டும். உணவு தயாரானவுடன் பகிர்ந்தளிப்பதற்கு ஏற்பாடு செய்வது சேவா தளத்தின் வேலையாகும். நாராயண சேவை நடத்தும் முறை இதுதான். அப்போதுதான் அதன் உட்பொருள் உணரப்படும். அரிசி ஒரு பொது இடத்துக்குக் கொண்டு வரப்படும்போதோ அல்லது ஒரு தொண்டர் சென்று அதை எடுக்கும்போதோ அது பசி தேவை உள்ளவர்களுக்கு வழங்கப்பட்டதா என்று உறுதிப்படுத்த வேண்டும்.

நாராயண சேவை என்பது கடைத் தெருவிலிருந்து விலைக்கு உணவைப் பெற்றுப் பகிர்ந்து அளிப்பது அல்ல.

"மானவ சேவையே மாதவ சேவை" — பாபா

## 4. சுகாதார வசதி:

வீடுகளையும் சுற்றுப் புறங்களையும் துப்புரவாக வைத்திருப்பதைவிட அங்கத்தவர்கள் சந்தை கூடும் இடங்கள், மாநகர சபைப் பாடசாலைச் சுற்றுடல்கள், தொழுகை இடங்கள், வீதிகள், கிணறுகள், பொதுசன கழிவு கூடங்கள் முதலியவற்றையும் துப்புரவு செய்வதற்குத் தங்கள் சேவையை விரிவாக்கத் தெண்டிக்க வேண்டும். பொதுசன அபிப்பிராயங்களைப் பயிற்றி எடுத்து சுத்தத்தின் தேவையை அவர்களுக்குப் பதியப்பண்ணுவதற்கு,

விசேடமாகக் கிராமங்களில், படங்களும் படவழுக்கிகளும் (Slides) காண்பிக்கப்படலாம். கிராமப்புறங்களில் சுகாதார வசதி என்று கொள்ளக்கூடியது வீதிகளையும், கான்களையும் சுத்தப்படுத்தி, ஈக்களும் நுளம்புகளும் பெருகாமல் குப்பை கூளங்களில் ''கமக்சின்'' அல்லது ''நொல்'' தெளிப்பதாகும். சேரிப் பிள்ளைகளுக்கு சுத்தத்தைப் பேணும் பழக்கமாக பல் தீட்டுதல், குளிப்பு முறை முதலியவற்றைக் கற்பிக்கலாம்.

## 5. புத்தக வங்கி:

பாலவிகாசிலும் ஆரம்ப சேவா தளத்திலும் இருந்து ஆரம்பித்து, பாடசாலை, கல்லூரி வரையிலுள்ள வறிய வசதியற்ற மாணவர்களுக்கு உதவுவதுதான் இந்தத் திட்டத்தின் உத்தேசம். கிரமமாகப் பஜனை நிலையங்களில் அறிவித்தல் செய்வது, தேவையான பாடப் புத்தகங்களைச் சேகரிக்க உதவியாகின்றது. ஒரு மையமான இடத்தில் புத்தகங்களைச் சேர்த்து, பின் தேவைகளின் பிரகாரம் தரம் பிரித்துக் கொள்ளலாம். இந்தத் திட்டத்திற்குரிய படிவங்களை அந்த வட்டாரத்திலுள்ள பாடசாலைகளுக்கும், கல்லூரிகளுக்கும் கல்வி ஆரம்ப ஆண்டுக்கு முன்பதாக அனுப்பி வைக்க வேண்டும். அந்த வருடத்தின்போது இரவல் கொடுக்கப்பட்ட புத்தகங்களைப் பின்னர் மாணவர்களிடமிருந்து மீளப்பெறலாம். முறையான தொடர் நடபடிக்கைமூலம் இந்த வசதியைப் பயன்படுத்திய மாணவர்களிடம் நிறுவனத்தில் சேரும் மனச்சார்பை உண்டு பண்ணமுடியும்.

## 6. தொழில் ரீதியான வழிகாட்டல் பணியகம்.

இதன் பிரதான நோக்கம் மாணவர்களுக்கு வழிகாட்டுதலாகும். அதனால் அவர்கள் தங்களுக்கு ஈடுபாடுடைய தொழிலைத் தொடங்கவும், வேலையில்லாத் திண்டாட்டம் குறையவும், நாட்டுக்குப் பெருமளவில் தேவைப்படும் திறன்மிக்க மனித ஆற்றல் கிடைக்கவும் வழியுண்டாகிறது.

இந்த நோக்கத்தைச் சாதிப்பதற்கு பணியகம் பின்வரும் நடவடிக்கைகளைக் கைக்கொள்ள வேண்டும்.

(ஏ) **கண் காட்சி நடத்துதல்:**

பொதுத் தராதரம் அற்றவர்களுக்கும், சாதாரண பொதுத் தராதரம் உள்ளவர்களுக்கும், உயர்தர பொதுத் தராதரம் உடையவர்களுக்கும் கிடைக்கக் கூடியதாக உள்ள பயிற்சிநெறிகள், தொழில் வசதிகள் பற்றி மாணவர்களுக்குத் தெளிவுபடுத்துதல்.

(பி) **விவேக அடைவு, உளச்சார்புப் பரீட்சைகள்:**

மாணவர்களின் விவேக அடைவையும் உளச்சார்பையும் மதிப்பிடுவதற்கு தரமுடைய உளவியல் தேர்வுகள் உள்ளன. கைதேர்ந்த உளவியலாளர்களால் நடத்தப்படும் இந்தப் பரீட்சைகள் மாணவர்கள் தங்கள் தொழில் துறைகளைத் தெரிவு செய்வதற்கு வழிகாட்ட உதவியாக இருக்கும்.

(சி) **தொழில் துறைகளைப் பற்றிய தகவல்:**

மாணவர்களுக்கு வழிகாட்டுதலில் உள்ள அத்தியாவசிய அம்சம், கிடைக்கக் கூடிய பல்வகைப் பயிற்சி நெறிகள், புலமைப்பரிசில் வகைகள், பொருளாதார உதவி, இவைகளை வழங்கும் வெவ்வேறு கல்வித் தாபனங்களைப் பற்றிய தகவலை அளிப்பதாகும். உதவிக்கு வருபவர்களுக்கு அறிவுரை கூறக்கூடிய திறமை

சாலிகள் (அரசைச் சேர்ந்தவர்களும், எங்களுடைய தொண்டர்களும்) இருக்க வேண்டும். இதற்கு முன்தேவையாக தொழில் ரீதியான வழிகாட்டு முறையில் எங்கள் தொண்டர்களுக்குப் பயிற்சி கொடுக்கப்பட வேண்டும். எங்கள் தொண்டர்களுக்கு ஒரு குறுகிய கால (15 நாட்கள்மட்டில்) பயிற்சி நெறியைப் பிரத்தியேகமாக நடத்தும்படி அரசையோ அல்லது சம்பந்தப்பட்ட அதிகாரிகளையோ கேட்கலாம். (ஆரம்ப சேவா தளத்திலுள்ள கல்லூரி மாணவர்கள், தொழில் நுட்ப வைத்திய, கல்வித்துறைகளிலிருந்து பொறுக்கி எடுத்த சாயி சேவையிலுள்ள நிபுணர்கள்) அத்தோடு வெவ்வேறு கைத்தொழில் நிறுவனங்களுக்கும் அவைகளின் சொந்தத் தொழில் நுட்பங்களைப் பொதுமக்களின் கணிப்புக்கு எடுத்துக் காட்டுவதற்கு இடம் ஒதுக்கிக் கொடுக்கப்படலாம். மேலும் உள்ளூர் புத்தக வியாபாரி ஒருவர் தன்னுடைய புத்தகங்களைக் குறைந்த விலை விகிதத்தில் விற்கச் சம்மதித்தால் ஒரு ஒதுக்கிடம் அவருக்கும் கொடுக்கலாம்.

(டி) பயிற்சி வகுப்புகளும் முதியோர் கல்வியும்:

பயிற்சி வகுப்புகள் முன்னோடியாக பாலவிகாஸ் மாணவர்களுக்கு ஆரம்பிக்கப் பட்டு, பின்னர் ஏனைய அடியார்களுக்கும் விரிவு படுத்தப்படலாம். இந்த வகுப்புகளைத் தொடங்குவதற்கு சிரேஷ்ட சேவா தள அங்கத்தவர்களின் உதவியைப் பெற்றுக்கொள்ளவும்.

தத்து எடுத்த கிராமத்திலோ அல்லது ஒரு சேரியிலோ முதியோர் கல்வியை ஆரம்பிக்கவும். பஜனைக்கு வருகை தரும் பக்தர்கள் மத்தியிலிருந்து வருபவர்களுக்கு வகுப்பைத் தொடங்கலாம். வகுப்புக்கு நியமிக்கும் நேரமும், கிரமமும் பரஸ்பர வசதியைப் பொறுத்ததாகும். வகுப்பு முடிவுறும் தறுவாயில் தெய்வீக உபதேசங்கள் பற்றி கலந்துரையாடல்களும் நடத்தலாம்.

## 7. நிவாரண வேலை ஒழுங்கு:

கடந்த சில வருடங்களில் எங்கள் நாடு வெள்ளப்பெருக்குகள், பஞ்சங்கள், சூறுவளிகள், பூமியதிர்ச்சிகள் என பல்வேறு விதமான இயற்கை அனர்த்தங்களுக்கு முகம் கொடுத்துள்ளது. அந்த நிலைமைகளில் ஏற்படும் பாரதூரமான அழிவுக்கும், உபாதைக்கும் ஈடு கொடுக்க பெருவாரியான வளங்களை மீள ஒதுக்கீடு செய்ய வேண்டியாகின்றது. பொதுவாக ஒரு நிவாரண வேலையில் பெருந்தொகையான ஆட்கள் சம்பந்தப்படுவதால் உள்ளூர் ஆட்சி மன்ற முகவர் நிலையங்களுக்கு ஊடாகவே நடவடிக்கைகள் ஒழுங்கு படுத்தப்பட்டு இணைக்கப்படவேண்டும். நிவாரணத்தை அளிப்பதற்கு அரச முகவர் நிறுவனங்கள் பொறுப்பு. ஆனால் மனிதாபிமான ரீதியில் சேவை நிறுவனங்களுக்கும் உதவி புரிவதற்குச் சந்தர்ப்பம் அளிக்கப்படுகிறது.

தேவையான நிவாரண வேலை ஒழுங்குகளைக் கணக்கிட்டபின் பின்வரும் இரு வகைகளாக அவற்றைப் பிரிக்கலாம்.

(i) உடனடி நடவடிக்கை
(ii) புனருத்தாரண நடவடிக்கை

எடுத்துக் காட்டாக வெள்ளப்பெருக்குச் சமயத்தில் எமது அனுபவம் இது. உணவுக்கு வேண்டுகோள் விடுக்கப்படுகிறது. மக்கள் உதவி செய்ய முன்வருகிறார்கள். இரண்டாவதாக மாநகரசபை வைத்தியர்களோடு சேவை ஆற்றுவதற்கு எங்களுடைய வைத்தியர்களையும் அனுப்புவதன் மூலம் சேவை நடவடிக்கைக்கு ஏற்படும் எல்லாவிதமான செல

வினங்களேயும் நீக்கிவிடலாம். பொதுவாகக் கூறுமிடத்து, அனர்த்தம் நிகழ்ந்த சில காலத்தில் மற்றைய பெரும்பாலான நிறுவனங்கள் விலகிப்போய்விடுகின்றன. சேவை விலகிவிட்டாலும் தேவை இருக்கவே செய்கிறது. புனருத்தாரண வேலே உச்சமான முக்கியத்துவம் வகிக்கிறது. எந்தப் புனருத்தாரண வேலேயின்போதும் நாங்கள் பின்வரும் விபரத்தை ஆராய்ந்து பார்க்கவேண்டும்.

(i) சேதத்தின் அளவுப் பிரமாணம்

(ii) உடனடி உதவிக்கு வேண்டிய கணக்கான தேவைகள்

(iii) நிவாரண வேலேக்கு ஈடுகொடுக்கக்கூடிய எமது வசதிகள்

அவர்களுடைய இடர்ப்பாட்டில் உதவுவதற்குத் தீர்க்கமான ஆலோசனேயும் துரிதமான செயலும் மிக முக்கியமாகும். தேவையை மதிப்பிட அளவீடுகள் நடத்தப்படவேண்டும். ஆனல் வெறும் அளவைகளில் மிகுந்த நேரம் விரயமாக்கப்படக்கூடாது. அது செயலோடு சேர்ந்து நடைபெறவேண்டும். தொழில்முறை ரீதியான தேவைகளேக் கணிப்பிட்டு உதவி கோரப்பட வேண்டும். மேற்பார்வையும் ஒப்பேற்றுகையும் சேவா தளத்திஞல் எளிதில் நடத்தக்கூடியதாகும்.

நிவாரண நடவடிக்கைகளின் பிரதம நோக்கம் உரிய சமயத்துக்கு ஈடுகொடுப்பதே. என்னநேரும் என்பதையும், ஆபத்து எந்தப் பரிமாணத்தில் தாக்கும் என்பதையும், யாரும் அறிந்திருப்பதில்லே. எந்த வடிவத்தில் அது தோன்றினுலும், தக்க முறையில் அதை எதிர் கொள்வதே எமது கடமையாகும். கொள்ளே நோய்கள் பரவும்போது அதைத் தடுக்கும் தகவல்களே நாங்கள் புகட்டலாம். அல்லது அரசின் சார்பாக பங்கீட்டுப் பொருட்களேப் பகிர்ந்தளிக்கலாம். பங்கீட்டை அரசாங்கம் அளிக்கிறது. தங்களே அர்ப்பணிக்கும் மனித சக்தியை நிறுவனம் அளிக்கிறது.

## 8. சாயி இலக்கிய விற்பனே: அதன் உட்பொருளும் அதைக் கணிப்பிடும் முறையும்:

இந்த நடவடிக்கையின் மூலம் நாங்கள் சாதிக்க எத்தனிப்பது என்ன? தோன்றக்கூடிய சிந்தனேயைப் புலப்படுத்துவதற்கு நாங்கள் கேள்வி பதில் ரூபத்தில் இதனே அலசியிருக்கிறேம். அதிலிருந்து நோக்கங்கள் எப்படிக் கணக்காகவும், பயனுறுவாகவும் ஈடேறுகின்றன என்பதைக் காண்பீர்கள். எங்களுக்குள்ள நிலேமைகளிலிருந்து எங்களுக்குரியவைகளேக் கொண்டு எவ்விதம் நாமெல்லோரும் பணிபுரியலாம்?

(1) கே: விலேக்கு யார் புத்தகங்களே வாங்குவார்கள்?

ப: அடியார்கள் அல்லது ஆர்வமுள்ளவர்கள்.

(2) கே: சாதாரணமாக அவர்கள் எங்கே அவற்றை வாங்குகிறர்கள்?

ப: பஜனே நிலேயங்களில்

(3) கே: பஜனே நிலேயங்களுக்கு யார் வருகிறர்கள்?

ப: வழக்கமாக வரும் அடியார்கள். புத்தகங்களே வாங்குபவர்களும் அவர்களே.

ஆகவே புதிய அடியார்கள் கிரமமாக நிலேயத்துக்கு வராவிட்டால், ஒரு புதுநூல் வரும்பொழுது, சாயி தத்துவத்துக்கு ஆட்பட்ட பழையவர்கள் ஒன்றில் அந்தப் புத்தகத்தை விலேக்குப் பெற்றிருப்பார்கள் அல்லது விலே கொடுத்து வாங்கப் பார்ப்பார்கள்.

(4) கே: எதனே நாங்கள் விற்கிறேம்?

ப: அது புத்தகமா? – இல்லே

கே: அப்போ, சாயி இலக்கிய விற்பனை என்று சொல்லி நாங்கள் மெய்யாக விற்பது எதனை?

ப: படிப்பு வாசனை மூலம் வாழ்வின் மதிப்பீடுகளை ஆய்ந்தெடுத்துக்கொண்டு இறைவனை அடையும் பிரயாணத்தை மேற்கொள்வதற்கான வாய்ப்பையே நாங்கள் இன்னொருத்தருக்கு விற்பனை செய்கிறோம்.

இதுதான் எங்கள் காரியம். நாங்கள் நூல்களை விலைக்காக விற்கவில்லை. இந்த விற்பனையில் எந்தப் பொருளாதாரத் தூண்டுதலும் சம்பந்தப்படவில்லை. எங்கள் காரியம் இன்னுமொருத்தருக்கு ஒன்றை வெளிப்படுத்துவது; வாய்ப்பை அளிப்பது. இன்னுமொருவர் ஒளிக்குள் வரவேண்டும் என்று இச்சைப்படுவது, அவ்வளவுதான். இது எமது திட்டமாகும் போது அப்புறம் அதைச் சாதிக்கும் வழி முறைகளை மேற்கொண்டு தீரவேண்டும். ஓர் எளிமையான விளக்கத்தைப் பார்ப்போம்.

நாம் அனைவரும் இங்கோ அல்லது வீட்டிலோ சாயி நடவடிக்கைகளில் ஒன்றுகூடும் சமயம் ஒத்த மனதுடைய மனித சமூகத்தில் இருப்பவர்களாகிறோம். ஆனால் எங்களில் ஒவ்வொருவருக்கும் தனிப்பட்ட விதமாகப் பிறரோடும் தொடர்புகள் உண்டு. அவர்கள் பொதுவில் நம்பிக்கை இல்லாதவர்களாக இருப்பார்கள். நாங்கள் தேவைக்குரியவர்களாவது இவர்களுக்குத்தான். அவர்களுக்கு நாங்கள் எங்களை வெளிப்படுத்தியாகவேண்டும். பெரும்பாலான வீடுகளில் பக்தர்கள் தவறாமல் பகவானின் ஒரு போட்டோப் படத்தை மாட்டி வைத்திருப்பார்கள். அங்கு வரும் அநேகர் கேட்பது "நீங்கள் சாயிபாபாவின் பக்தரா" என்பதுதான். ஆம், நான் பக்தன்தான் என்கிறோம். அத்தோடு முடிந்துவிடுகிறது. எமது விருந்தினரை உபசரிக்கும் மேசையில் சாயி நூல்கள் இருப்பதை அரிதாகவே காண்கிறோம். புத்தகங்களை வெளிப்படுத்தக்கூடிய இடம் இதுதான். மானிட சுபாவம் தன்னெதிரில் காணும் எதனையிட்டும் எதிர்விளைவுக்கு உட்படுவதாகும். சந்தர்ப்ப அனுகூலங்கள் அதிகமானபடியால் உங்கள் விருந்தாளி ஒரு புத்தகத்தைத் தெரிந்தெடுப்பார். சந்தர்ப்பமில்லாவிட்டால் ஒன்றுமில்லை. எடுத்தவர் புத்தகத்தை நோட்டம் விடலாம். ஒருவேளை ஒரு பக்கத்தை அல்லது இரண்டு பக்கத்தைத் தானும் வாசிக்கலாம். அதைப்பற்றி உங்களோடு பேச்சுக் கொடுக்கலாம்.

பகவான் எத்தனையோ தடவைகள் குறிப்பிட்டிருக்கிறார்.

மாத்ரு தேவோ பவ
(தாயாரைக் கடவுளாக நினைத்து வழிபடு)
பித்ரு தேவோ பவ
(தந்தையைக் கடவுளாக நினைத்து வழிபடு)
ஆசார்ய தேவோ பவ
(குருவை கடவுளாக நினைத்து வழிபடு)

இவற்றோடு சேர்த்து "அதிதி தேவோ பவ" என்றும் குறிப்பிட்டிருக்கிறார். அதன் கருத்து விருந்தினர்களும் உங்கள் கடவுளே என்பதாகும். இன்று எங்களில் பலர் மட்டரகமான மதிப்புகளைத் திருப்தி செய்வதற்காக பலவகையான சஞ்சிகைகளை இட்டு வைக்கிறோம். பிலிம்பேர், ட்ரீம் ஸ்டார், ஸ்டார் அன்ட் ஸ்டைல் வகையறுக்கள். விவர அறிவோடு அவர்களுக்குக் கீதை, சனாதன சாரதி, பகவானின் நூல்கள் ஆகியவற்றை அளிக்கக்கூடாதா? நாங்கள் எதனைத் தெரிந்தெடுக்க தவிக்கிறோமோ அதையே அவர்களுக்கும் வழங்கக்கூடாதா? எங்களுடைய சொந்த எண்ணங்கள் வேண்டுவதை அவர்களுக்கும் வழங்கக்கூடாதா? அப்போது அவர்களும் அந்த ஆனந்தத்தில், பேரின்பத்தில் திளைக்கமுடியும்.

இந்தக்கட்டத்தில், விருந்தாளி நூலை இரவல் வாங்குவதற்கோ அல்லது விலைக்குப் பெறுவதற்கோ நாங்கள் உதவி புரியவேண்டும். எல்லா வட்டாரங்களிலிருந்தும் அவரைச் சூழத்தக்க அறியாமைத் தடங்கலை அகற்றுவதற்கு நாங்கள் மேற்கொள்ளும் சாதனை, பிரயாசைகள் இவையாகும். தவிரவும் எங்களில் பலரிடம் நூல்கள் உண்டு. அவற்றைப் படித்துவிட்டு மீண்டும் அடுக்கில் வைத்துவிடுகிறோம். மற்றவர்களும் படிக்க உதவும் வகையில் பொருத்தமான வழியொன்றை உண்டுபண்ணி நாங்கள் அந்தப் புத்தகங்களுக்கு இன்னும் மிகுதியான பயன்பாட்டை ஏற்படுத்த முடியும். அதுவும் மேற்கொண்டு ஏதும் செலவினங்களுக்கு இடமில்லாததாக இருக்கவேண்டும். சுருங்கச் சொன்னால் உங்களிடம் உள்ளவைகளை உங்களுடைய நிலைகளிலிருந்து மற்றவர்களுக்கு உதவவேண்டும் என்பதன் கிடக்கையை நாங்கள் மனசார உணரத் தலைப்படுகிறோம். இவ்விதமாக ஒவ்வொருவரும் நலம்பெறுவதற்கு அவர்களுடைய நடவடிக்கைகளின் உட்தத்துவம் வெளிப்படுத்தப் படவேண்டும்.

## 9. கல்லூரி மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டி

கல்லூரி மாணவர்கள் மத்தியில் ஒரு விழிப்புணர்வை உண்டுபண்ணி, கலாச்சார, ஆத்மிக மதிப்புகளை அவர்களிடம் அபிவிருத்தியடையத் தூண்டும் நோக்கோடு, பகவான் பாபாவின் போதனைகளில் வலியுறுத்தப் பட்டிருக்கும் வெவ்வேறு விடயங்கள்பற்றி ஒரு கட்டுரைப் போட்டியை, ஸ்ரீ சத்திய சாயி நிறுவனங்கள் ஒவ்வொரு வருடமும் நடாத்த வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. இந்தப் போட்டியை நடத்துவதற்குச் சில உதவிக் குறிப்புகள் கீழே தரப்பட்டுள்ளன.

(i) மாநிலத்திலுள்ள வெவ்வேறு நிலைமைகளுக்கு ஏற்பவும் மாணவ சமுதாயத்துக்கு உகந்ததாகவும் பின்வருவனவற்றிலிருந்து, கட்டுரைப் போட்டிக்கு மூன்று அல்லது நான்கு விடயங்களைத் தெரிவுசெய்யவும்.

- (1) ஒழுக்கமான வாழ்வும் அதன் பெறுமதியும்.
- (2) வாழ்வில் சத்தியத்தின் பெறுமதி.
- (3) அவதாரம் என்பதன் உத்தேசக்கருத்தும் அவதாரமான பாபாவும்.
- (4) தெய்வீகப் பேரன்பின் சொரூபமான ஸ்ரீ சத்திய சாயி பாபா.
- (5) கல்லூரி மாணவர்களிடம் பாபாவின் அருட்தாக்கம்.
- (6) கர்ம யோகத்தைப்பற்றி சாயிபாபாவின் கருத்துகள்.
- (7) சாந்தியின் இருப்பிடமான பிரசாந்தி நிலையம்.
- (8) ஒரு இலட்சிய சமுதாயத்தைப்பற்றி ஸ்ரீ சத்திய சாயி பாபாவின் நோக்குகள்.
- (9) கல்வியைப்பற்றி ஸ்ரீ சத்திய சாயி பாபாவின் நோக்குகள்.

(ii) கட்டுரை 2,000 சொற்களுக்கு மேற்படக்கூடாது.

(iii) உரிய முறையில் மாணவர் கையொப்பம் இட, கல்லூரி அதிபரினால் அதன்மேற் கையொப்பமிடப்பட்ட ஒரு பிரவேசப் பத்திரம் இருக்கவேண்டும்.

(iv) ஆங்கில மொழியில் தான் கட்டுரை சமர்ப்பிக்கவேண்டும் என்று வற்புறுத்தக்கூடாது. பிரதேச மொழிகளும் அனுமதிக்கப்பட வேண்டும்.

(v) சிறந்த மூன்று கட்டுரைகளுக்குத் தரத்தின் அடிப்படையில் வெகுமதி வழங்கப்படலாம். சாயி இலக்கியமும் வெகுமதிகளாக அளிக்கப்பட வேண்டும்.

## 10. வைத்தியசாலை விஜயம்.

இது சேவா தளமும், மகிளாவிபாக்கும் மேற்கொள்ளும் நடவடிக்கைகளில் ஒன்றாகும். சில இடங்களில் அடியார்களும் இதில் ஈடுபடுகிறார்கள். யார் யார் இதில் ஈடுபட்டாலும்

இந்த நடவடிக்கைக்கு உத்தியோகத்தவர்கள் ஏதாவது வைத்தியசாலையைத் தேர்ந்தெடுக்க முதல் முன்கூட்டியே முறையாகத் திட்டமிட்டிருக்க வேண்டும். இது சம்பந்தமாக பின் வரும் உதவிக் குறிப்புகளை மனத்தில் கொள்ளவும்.

(1) பதவியிலுள்ளவர்கள் வைத்தியசாலையின் பொறுப்பதிகாரியைச் சந்தித்து, நிறுவனம் எவ்விதமாக எப்போது சேவா தளத்தொண்டர்களை அனுப்பவிருக்கிறது என்பதையும் அவர்கள் விஜயத்தின் நோக்கங்கள் என்ன என்பதையும் விளக்கிக் கலந்துரையாட வேண்டும்.

(2) தொண்டர்கள் வைத்தியசாலை நிர்வாகத்திலும் நோயாளிக்கு அளிக்கப்பட்டிருக்கும் சிகிச்சை முறையிலும் தலையிடக்கூடாது.

(3) சிற்சில சமயங்களில் நோயாளிக்குப் பணம் அல்லது சாப்பிடப் பழவகை அல்லது இரண்டும் கொடுக்க வேண்டும் போல் தொண்டர்களுக்குத் தோன்றும். இது தவிர்க்கப் படவேண்டும்.

(4) இந்த நடவடிக்கையில் அதிமுக்கியமானது என்னவென்றால் நோயாளிக்கு அருகில் இருந்து அவர் நோய் திரும்படி அல்லது அவரின் துன்பமும் வேதனையும் தணியும்படி பிரார்த்தனை செய்வதாகும்.

(5) தொண்டர்கள் அவர்களுக்குப் பயனுள்ள கட்டுரைகளை அல்லது சமய, ஆத்மிக சம்பந்த மான விடயங்களைப்பற்றிய நூல்களை வாசித்துக் காட்டலாம் அல்லது நோயாளிகளுக் குக் கடிதங்கள் எழுதிக் கொடுக்கலாம். துணையாக இருக்கலாம்.

(6) வைத்தியசாலையின் சட்டதிட்டங்கள் அனுமதிக்காவிட்டால், நிறுவனம், இந்தக் கடமையில் ஈடுபட்டிருக்கும் யாரையும் சேவா தள இலச்சினையோ கழுத்துப் பட்டியோ அணிந்திருக்கவேண்டும் என்று வற்புறுத்தக்கூடாது.

## 11. தகவல் பணியகம் (நகரங்களுக்கும், பட்டினங்களுக்கும்)

திடீர் சுகயீனம், களவுகள் போன்ற அவசர நிலைமைகள் ஏற்படும் நேரங்களிலும் அற்ப பிரச்சனையாக குடும்பத்திலுள்ள பாடசாலை அல்லது கல்லூரி செல்லும் மாணவர் களுக்குப் பண உதவி தேவைப்படும் போதும் வழக்கமாக ஒரு சாதாரண குடிமகனுக்கு எந்த முகவர் நிலையத்தை, தாபனத்தை அல்லது நிறுவனத்தைத் தொடர்பு கொள்வது என்பது கடினமான பிரச்சனையாக உள்ளது. பொதுசன நலம் கருதி அத்தகைய பயனுள்ள தகவலைச் சீராகத் தொகுத்து பொருத்தமாக அட்டவணைப்படுத்தி வெளியிடுவது ஆக்க பூர்வமான ஒரு சேவை நடவடிக்கை எனலாம். இதை நோக்கத்தில் கொண்டு ஒரு நகரத்தின் பகுதியில் அல்லது ஒரு பட்டினத்தில் அல்லது ஒரு குறிப்பிட்ட குடியிருப்பில் வசிக்கும் பொதுசனத்தின் நன்மைக்காகத் திரட்டப்படும் தகவல்களில் பின்வரும் அம்சங் கள் அடங்க வேண்டும் என்று யோசனை கூறப்படுகின்றது.

(1) குடியிருப்புக்கு அணித்தாயுள்ள வைத்தியசாலைகளின் பெயர்களும், முகவரிகளும், தொலைபேசி எண்களும்.

(2) அந்த வட்டாரத்திற்குரிய தீயணைப்பு நிலையத்தின் முகவரியும் தொலைபேசி எண்ணும்.

(3) அந்த வட்டாரத்திற்குரிய பொலிஸ் நிலையங்களின் முகவரிகளும் தொலைபேசி எண்களும்.

(4) கல்லூரிகளினதும் பாடசாலைகளினதும் பெயர்களும் முகவரிகளும்.

(5) வசதியற்றவர்களுக்குப் புலமைப் பரிசில்களும் வேறு உதவியும் அளிக்கும் சமூகநல தாபனங்களின் பெயர்களும், முகவரிகளும்.

(6) அந்த வட்டாரத்திலுள்ள இலவச மருத்துவ மனைகள் அருகில் உள்ள அம்புலன்ஸ் சேவைகள், பிராணவாயு வசதி, சக்கரக் கதிரைகள், நோயுற்றவர்களுக்காக மேலும் உள்ள வசதிகள்.

(7) உடனுதவி நிலைய இருப்பிடம்.

(8) சாயி சேவா நிறுவனத்தினால் வைத்திருக்கப்படும் முதலுதவிப் பெட்டிகளின் இருப்பிடம்.

(9) அந்த வட்டாரத்தில் அல்லது பிரிவிலுள்ள பஜனை நிலையங்களின் முகவரிகள்.

(10) அந்த வட்டாரத்தில் அல்லது பிரிவிலுள்ள பாலவிகாஸ் நிலையங்களின் முகவரிகள்.

(11) அந்த வட்டாரத்திலுள்ள தொழில் பதிவகத்தின் முகவரி.

(12) வீதி விபத்துக்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கு வைத்திய உதவி அளிப்பதற்குப் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் பற்றிய ஆதாரக் குறிப்புகள்.

மேற்குறிப்பிட்ட தகவலைச் சேகரித்து எளிதாகப் பயன்படுத்தக் கூடிய விதத்தில் அட்டவணைப் படுத்துவதற்கு ஒரு அங்கத்தினர் குழுவைச் சமித்தி நியமிக்கலாம்.

இந்த விபரங்களைச் கல்லச்சுப் பொறியில் பிரதி பண்ணுவதே அடுத்த நடவடிக்கையாகும். அதை நிறைவேற்றும் போது இரண்டு விடயங்களை மனம் கொள்ளவேண்டும். முதலாவதாக கல்லச்சுப்பிரதி ஸ்ரீசத்திய சாயி சேவா சமித்திப் பிரிவின் பெயரையும், முகவரியையும், பிரிவு அமைப்பாளரின் தொலைபேசி எண்ணையும் கொண்டிருக்கவேண்டும். இரண்டாவதாக, அதில் பகவான் பாபாவின் பொருத்தமான உபதேசம் ஒன்று வெளியிடப்பட்டிருக்க வேண்டும்.

கல்லச்சுப் பிரதிகள் பஜனை நிலையங்களில் ஒவ்வொரு சாயி அடியாருக்கும் விநியோகிக்கப்பட வேண்டும். அவர் அதைப் பசையினால் ஒட்டி தன்னுடைய (ஆணோ, பெண்ணோ) வீட்டில் வைத்திருப்பார். அம்மட்டல்ல, அவர் தன்பாட்டில் அந்தப் பிரதியிலிருந்து பத்து மேலதிக பிரதிகள் செய்து தனது அயலிலுள்ள குடியிருப்பாளர்களுக்கு மத்தியில் சுற்றிவர அனுப்புவார். அதன் பேறாக இருவகைத் திட்டங்கள் கைகூடுகின்றன. சாயி அடியார்களுக்கு உதவப்படுகிறது. சாயி நடவடிக்கைகளினால் அனுகூலம் பெறவிரும்பும் பொது மக்களுக்கும் உதவி அளிக்கப்படுகிறது. பதவி வகிப்பவரோ அல்லாதவரோ என்றில்லாமல் ஒவ்வொரு சாயி அடியாரும் பங்கு பற்ற முடியுமாதலால் இந்தத் தகவல் பணியகத் திட்டம் உடனடியாக அமுல் செய்யப்படவேண்டும்.

12. சாயி சேவகர்களின் நடவடிக்கை வரையறைக்குள் அந்தகர்களுக்குப் பணியாற்றுதற்கும் கணிசமான இடம் உண்டு. பின்வரும் வகையில் அந்தப் பணி திட்டமிடப்படலாம்.

(1) மாணவர்களிடையே போதிய ஆர்வம் உள்ளதா என்று நிச்சயப்படுத்திக் கொண்டு, நிர்வாகத்திடம் அல்லது சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் அனுமதிபெற்று பாலவிகாஸ் வகுப்புகளும், பஜனை நிலையங்களும் அல்லது இரண்டில் ஒன்று ஆரம்பிக்கப்படலாம்.

(2) தங்களுடைய மாதாந்த பேசும் புதினத்தாளில் சேர்ப்பதற்காக பகவானின் பஜனைகள், உப கதைகள், கதைகள், திருவாய் மொழிகள் ஆகியவற்றிற்குச் சில இடங்களி

னுள்ள குருடர் பாடசாலைகள் வேண்டுகோள் செய்திருக்கின்றன. அவ்விதமான வேண்டுகோள்கள் உடனே கவனிக்கப்படவேண்டும். மற்றைய இடங்களிலுள்ள குருடர் பாடசாலைகளுக்கும் இந்தச் சேவையை அளிக்கக்கூடுமா என்பதைக் கண்டறிய முயற்சிகள் எடுக்கப்படலாம்.

(3) ஹோவார்ட் மேர்பட் எழுதிய "அற்புத மனிதர்" என்ற பகவானின் சரிதம் பேசும் புத்தகமாக்கப்பட்டு அதிகபட்சமான அந்தகர்களுக்கு கிடைத்திருக்கிறது. ஒவ்வொரு சாயி நிலையத்திலும் இந்தப் புத்தகம் கிடைக்கச் செய்யவேண்டும். அப்போது அந்த வட்டாரத்திலுள்ள அந்தகக் குடிசனத்துக்கு அது இரவல் கொடுக்கப்படலாம். சிறு சிறு சமயக் கதைகள், பகவானின் உபதேசங்கள் முதலியவற்றை கசெற்றில் ஒலிப்பதிவு செய்து அந்தத் தாபனங்களுக்கு அன்பளிப்புச் செய்வதும் இந்தச் சேவைக்குப் பிறிதொரு வழியாகும். ஒலிப்பதிவு செய்பவரின் குரல், தொனி, உச்சரிப்பு ஆகியவை தெளிவாகவும் திடமாகவும் பொருந்தவேண்டியது இந்தக் கருமத்துக்கு அவசியம்.

(4) ஏற்கனவே கைப்பணி வேலைகளில் அல்லது அதைச் சார்ந்த வேலைகளில் பயிற்சி பெற்றுள்ள அந்தகர்களுக்கு உதவக்கூடிய நிலையில் உள்ள சாயி அடியார்களின் முயற்சியோடு தொழில் வசதிகளைக் கண்டுபிடிப்பதில் வழிகாட்டலாம்.

(5) அந்தகர்களுக்காக புத்தகங்கள் வாசிப்பது, கடிதங்கள் அல்லது கட்டுரைகள் சொல்ல எழுதுவது ஆகியவை விசேடமாக மகளிரால் மேற்கொள்ளக்கூடியதாகும். எவ்விதமாலும் இந்தப் பணி இயலும் வகையில் என்று விட்டு விட்டு இல்லாமல் நீண்டகால அடிப்படையில் வாரத்தில் குறிப்பிட்ட நாட்களில் கிரமமாக மேற்கொள்ளப்படவேண்டும்.

(6) ஆத்மிக விடயங்கள் சம்பந்தமான விவாதங்கள், பிறெயிலி வாசிப்புப் போட்டி ஆகியவற்றை அந்தகர்களுக்கு ஏற்பாடு செய்யலாம்.

(7) அந்தகர்களோடு தோழமைச் சங்கம், குற்றத்தடுப்பு இல்லங்களில் பஜனைகள், வயோதிபர்களோடு கூட்டுறவு முதலியவையும் வலது குறைந்தவர்களுக்காக மேற்கொள்ளப்படும் பிற பணிகளில் அடங்குவனவாகும்.

## 13. பலநோக்கு "வான்" சேவைத் திட்டம்

மாவட்டங்களில் நடைபெறும் பணிகளுக்கு பயன்படும்விதமாக வழிகாட்டவும், துணைபுரியவும், மேற்பார்வை செய்யவும் இதுவரை விடுபட்டிருந்த மாவட்டங்களில் பணிகளை ஆரம்பிக்கவும் பல்வேறு துறைகளிலும் பூரணமாகப் பயிற்றப்பட்ட பணிக்குழு ஒன்றை மாநிலத் தலைமை நிலைய சமித்தியிலிருந்து மாவட்டவாரியாக சுற்றவர அனுப்பவேண்டும். இந்தக் குழுவின் தேவைக்கு ஒரு பலநோக்குக் கூட்டு வண்டியை (வான்) ஒப்படைப்பது திட்டம் இலகுவாகவும், திறம்படவும் நடைபெற ஏதுவாகும். ஒலிபெருக்கி, படச்சுருள், படவழுக்கி, படம் காட்டும் பொறி, ஒலிப்பதிவுக் கருவி, கண்காட்சிப் பலகைகளும் படவரைபுகளும், நூல்கள், முதலுதவிப் பெட்டி முதலியவற்றை இந்த வண்டி கொண்டுசெல்ல முடியும். நெடுந் தொலைவிலுள்ள இடங்களில் வைத்தியப் பரிசோதனை செய்வதற்கும் வைத்திய அதிகாரிகளினால் இந்த வண்டி பயன்படுத்தப்படலாம்.

இது விடயமாகப் பின்வரும் யோசனைகள் நிச்சயம் உபகாரமாயிருக்கும்.

1. ஒரு கூட்டு வண்டி, அதிலும் ஒரு சிறிய கூட்டு வண்டி கொள்வனவு செய்யப்படலாம். "மற்றுடர்" தேவைக்குப் போதுமானதாக இருக்கும். கொள்வனவுக்கு வேண்டிய முதலுக்கும் பராமரிப்புக்கும் மாநில நிறுவனம் வகைசெய்யவேண்டும். எரிபொருள் செலவைச் சிக்கனப்படுத்துவதற்கு வாகனம் டீசல் இயந்திரம் பொருத்தப்பட்டதாக இருக்கவேண்டும். ஒன்பது பேராவது இருக்கத்தக்க ஆசன வசதி கொண்டதாக இருக்க வேண்டும். பல்வேறு சேவைகளுக்கும் தேவையான தளபாடங்களைக் கொண்டு செல்வதற்குப் போதிய இடவசதியும் இருக்கவேண்டும்.

2. இந்த வாகனத்தைச் சேவா தளத்தின் பொறுப்பில் ஒப்படைக்கலாம்.

3. விசேடமாக வார இறுதியிலும், இரண்டு மூன்று விடுதலைகள் அடுத்துவரும் நாட்களிலும் இந்த வண்டி சுற்றுச் சேவைக்கு எடுத்துச் செல்லப்படலாம்.

4. பின்வரும் தளபாடங்களை அது கொண்டுசெல்லும்.

   (i) சாயி இலக்கியம்

   (ii) படவரைபுகளும், பலகைகளும் அத்தோடு தெய்விக உபதேசங்களையும், இலட்சியங்களையும் பிரதிபலிக்கும் ஸ்ரீ சத்திய சாயி கல்விக் கண்காட்சிக்குரிய பிற காட்சிப் பொருட்கள்.

   (iii) படம் காட்டும் பொறி, படவழுக்கி காட்டும் கருவி, ஒலிப்பதிவுக் கருவி, ஒலி வாங்கியோடு ஒலிபெருக்கி.

   (iv) தகவல் பணியகத்தின் துண்டுப்பிரசுரங்கள்.

   (v) முதலுதவிப் பெட்டி.

   (vi) ஆரோக்கிய, சுகாதாரத் தகவல்.

   (vii) நிறுவனத்தைப்பற்றிய தகவல்.

5. இந்த வகையான பணிக்குத் தெரிவுசெய்யப்படும் போர்களுக்கு கீழுள்ள ஒன்றுக்கு மேற்பட்ட துறைகளில் முழுப்பயிற்சி கொடுக்கப்படவேண்டும்.

   (i) பஜனைகள் நடத்துதல்

   (ii) சாயி இலக்கிய விற்பனை

   (iii) கண்காட்சிப் படவரைவுகளை விளக்குதல்

   (iv) படம் ஓட்டுதல், படவழுக்கி காண்பித்தல்

   (v) ஒலிப்பதிவு செய்தல்

   (vi) மோட்டார் வாகன ஓட்டம், சில்லறைப் பிழைகள் திருத்துதல்

   (vii) ஒலிபெருக்கி ஒலிவாங்கி பொருத்துதல்

   (viii) அலங்கரித்தல்

   (ix) சாயி அவதாரம், சாயி உபதேசம், மற்றைய ஆத்மிக, நிர்வாக, ஆரோக்கிய, சுகாதார விடயங்களைப்பற்றி உரை நிகழ்த்துதல்

   (x) நடவடிக்கை மேற்கொள்ளுவதற்காக புதிய நிலையங்களைத் திறத்தல்.

### 14. படச்சுருள்களும் படவழுக்கிகளும்:

கல்வியறிவுக்கேற்ப திரைப்படங்களை அரச அதிகாரிகளிடமிருந்து பெறமுடியும். பாலவிகாஸ் வகுப்புகளிலே ஆரோக்கியம் சுகாதாரம் பற்றிய பட வழுக்கிகள் காண்பிக்கலாம். அதிகபட்சமான மக்கள் கூடும் பொதுக் கூட்டங்களிலே பாபாவைப் பற்றியும் அவர் உபதேசத்தைப் பற்றியும் உள்ள படங்களைக் காண்பிக்கலாம்.

### 15. இலவச நூல் நிலையங்கள்

சாயி இலக்கியத்துக்கென ஆரம்பிக்கப்படும். இது மெல்ல மெல்ல ஆத்மிகம் கலாச்சாரம் சம்பந்தமான சகல விடயங்களுக்குமுரிய நூல்களைக் கொண்ட முறைப்படியான நூல் நிலையமாக அபிவிருத்தி செய்யப்படலாம். அங்கத்துவம் இலவசமானலும் இரவல் கொடுக்கப்படும் புத்தகங்களின் பாதுகாப்புக் கருதி ஒரு குறிப்பிட்ட தொகை பிணையாகக் கட்டப்பட வேண்டும். இவ்வகையான நூல் நிலையங்கள் பிரபலமான சில பஜனை நிலையங்களில் ஏற்படுத்தப்படலாம்.

### 16. கண்காட்சி

தெய்வீக உபதேசம் பற்றியும் சேவை நடவடிக்கைகள் பற்றியும் விளக்கும் கண்காட்சியை ஒரு மையமான இடத்திலே ஒழுங்கு படுத்தலாம். அன்றைய நிகழ்ச்சிகளுள் அடங்குவன; ஒரு அடியாரின் உரை, பாபாவைப் பற்றிய திரைப்படங்கள், சாயி இலக்கிய விற்பனைப்பீடம், கேள்வி – பதில் அரங்கு, பாலவிகாஸ் பிள்ளைகளின் கலாச்சார நிகழ்ச்சியோடு முடிவுறல். இவ்விதமான பொது நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்வதற்கு முன் அதைப் போதியளவு பிரபலப்படுத்த வேண்டும்.

*

7/50

சாந்தி அச்சகம், யாழ்ப்பாணம்.
போன்: 23002